"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

ஐப்பசி -கார்த்திகை -மார்கழி - 2000

# கலசம்
# KALASAM

## கந்தஷ்டி விரத சிறப்பிதழ்



இறைவா!
கூரையைப் பிய்த்தது யார்?
யாரைக்காக்க உங்குள்ளாய்?
கல்லாக இருந்தாலும் ,
காயம் பட்டிருக்குமே!
நீ!
கல்லில்லை என்று சொல்ல
கூரைக்கு வெளியே வாஇறைவா!

லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ் £1.00

# SML
## Royal Jewelry

புன்னகைக்கு நிகர் எங்கள் பொன்னகையன்றோ!



* மனம் கவரும் தங்க நகைகள்
* தங்கம் - கரட் உத்தரவாதம்
* தாலி - பொன்னுருக்கல் வசதிகள்
* உங்கள் தேவைகளுக்கேற்ற வண்ணம் நகைகள் பிரத்தியேகமாய் தயாரிக்கும் வசதிகள்
* சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்

**287, HIGH STREET NORTH ,**
**EAST HAM,**
**MANOR PARK,**
**LONDON E12 6SL**
**Tel: 0208 472 5500**

ஈசன்நெறி பரப்ப இன் தமிழ் வளர்ப்போம்
மணி 8
# கலசம்
# KALASAM
ஒலி 32
ஐப்பசி – கார்த்திகை – மார்கழி 2000

## ஆலயங்கள் அற நிலையங்களாக மாறட்டும்

லண்டன் மாநகரம் ஆலயங்களால் நிரம்பி வழிகின்றது. அடிப்படை நோக்கு எதுவுமில்லாமல் மக்களின் இயல்பான பக்தி உணர்வினைச் சாக்காகக்கொண்டு தனிப்பட்ட மனிதர்களின் சுயலாபங்களை நோக்காகக் கொண்டு மண்டபங்களெல்லாம் ஆலயங்களாகின்றன. ஆலயங்கள் எல்லாம் வருமானத்தால் நிரம்பி வழிகின்றன.

ஆலயங்களின் வருமானங்கள் சமூகநலனைக் கருத்திற்கொண்டு மறுமுதலீடு செய்யப்படாமல் தனிப்பட்ட மனிதர்களின் சுயதேவைகளைப் பூர்த்திசெய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை வருத்தத்துக்குரியதே.

சமயங்கள் கல்வியாலும் கல்வி சமயத்தாலும் புடமிடப்படுகின்றது என்கின்ற கருத்து காலத்தையும் இடத்தையும் கடந்து நிலைபெற்று வாழுகின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இஸ்லாமிய மதமாகட்டும், கிறிஸ்தவ மதமாகட்டும் இந்த உண்மையைப் புரிந்து கொண்டதனால்தான் அவர்களுடைய ஆலயங்களுக்குப் பக்கத்தில் அவ்வாலயத்தின் பெயராலோ அல்லது சமயத்தின் பெயராலோ கல்விநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை நான் மட்டுமல்ல நீங்களும் அறிவீர்கள். இந்தக் கல்விக் கூடங்கள் அவர்களின் ஆலய வருமானத்தில் ஆலயநிர்வாகச் செலவுபோக மிகுதி மறுமுதலீடு செய்யப்பட்டதனால்தான் என்பது ஏன் எங்களுக்கு இன்னும் புரியவில்லை. எங்கள் மண்ணில் வாழும் அகதிகள் உணவு மட்டும்தான் இழந்து நிற்கிறார்கள். ஆனால் இந்தநாட்டில் புலம்பெயர்ந்து வந்துள்ள எங்கள் எதிர்காலச் செல்வங்கள் தமிழனென்கின்ற அடையாளத்தையே தொலைத்துவிடப் போகிறார்கள் என்கின்ற உண்மைத் தரிசனம் ஏன் எவருக்கும் புரியவில்லை?.

ஆறுமுக நாவலர் காலத்தில் சைவப் பிரகாச வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் தோன்றிய வரலாறுகளைக் கூட மறந்துவிட்டமை மனதை நெருடுகின்றது.

எங்களின் எதிர்காலச் சந்ததிகள் திசை தெரியாது தடுமாறுவதைத் தடுக்க எங்கள் ஆலயங்கள் ஏன் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை பாடசாலைகள் அமைப்பதில் செலவு செய்யக் கூடாது?

**இவற்றைச் செய்ய ஆலயங்கள் முன்வராவிட்டால் தயவு செய்து ஆண்டவனின் பெயருக்கு மாசு கற்பிக்காமல் ஆலயக் கதவுகளை இறுகச் சாத்திவிட்டு லாபம் தரும் மூலைக்கடைகளைப் போடப் புறப்படுங்கள்.**

ஆலயங்களை வியாபார நிலையங்களாக மாற்றாமல் அறநிலையங்களாக மாற்றுங்கள்.

நாளைக்கு வாழப்போகும் இளையவர்கள் கலை கலாசாரத்தோடும் சமய உணர்வோடும் வாழத்தகுந்த கல்விக் கூடங்களை அமைத்துக் கல்விமான்களை உருவாக்குங்கள்.

**மு. நற்குணதயாளன்**

ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்
**கலசம் - 32**
ஐப்பசி - கார்த்திகை - மார்கழி 2000

ஆசிரியர் : திரு மு. நற்குணதயாளன்
துணை ஆசிரியர்: திரு சி. அற்புதானந்தன்
நிர்வாகம்: திரு வ.இ. இராமநாதன்
உதவி நிர்வாகம்: திரு சிவ. அசோகன்

நிர்வாகக் குழு:
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு ந. சிவராசன்
திரு S.தர்மலிங்கம்
Dr. N. நவநீதராசா
திரு இ. சிவானந்தராசா
திரு S. சிறீரங்கன்
திரு பால. ரவீந்திரன்
தொடர்பு முகவரி:
49 Marlands Road
Clayhall
Ilford, Essex IG5 0JJ
Tel: 0208 550 4233
Tel: 0208 550 4233

கலசத்தில் வரும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாளராவர். ஆக்கங்களை நிராகரிக்கவோ திருத்தவோ ஆசிரியர் குழுவுக்கு உரிமை உண்டு.

**இலங்கையில் தொடர்பு:**
Mr K. Balasubramaniam,
131 sangamitha Mawatha
Colombo 13

**ஜேர்மனியில் தொடர்பு:**
Mr. K. Parameswaran, Alte-Aakob Str 134, 10969
Berlin, Germany
Tel: 030 251 0209

# உள்ளே...

1. ஆசிரிய தலையங்கம் 1
2. சிறீ ரமண மகரிஷி 3
3. சிவயோகியும் இஸ்லாமிய சாதுவும் 13
4. தெரிந்த விடயங்களும்......... 16
5. சிறுவர் கலசம் 17
6. தாய் மண்ணில் ஓர் ஆலயம் 25
7. பெயரில் என்ன இருக்கிறது 28
8. தமிழ் ஆண்டு எது? 30
9. அறப்பணியில் ஆலயங்கள் 34
10. நர்த்தன விநாயகா 36
11. கனடாவில் அருள்மிகு யைப்பன்...... 38
12. சங்கத்தின் செய்திகள் 40

**கலசம் வாசகர்களுக்கு கலசம் ஆசிரியர் குழுவினதும் சைவ முன்னேற்றச் சங்க ஆட்சிக் குழுவினதும் தீபாவளி வாழ்த்துக்கள்.**

# ஸ்ரீ ரமணமகரிஷி

## ஸ்ரீ ரமணாசிரம நிர்மாணம்

மலை மீதுள்ள ஸ்கந்தாச்சிரமத்திலிருந்து மகரிஷிகள் அடிக்கடி அன்னையின் சமாதிக்குப் போய் வருவது வழக்கம். ஒருநாள் அங்கே சென்றவர் மலைக்குத் திரும்பவில்லை. அது முதல் அங்கே தங்கலானார் . அந்த ஸ்தலமே இப்போதுள்ள ஆச்சிரமமாக விளங்குகின்றது. சுயேச்சையாக ஸ்கந்தாச்சிரமத்தை விட்டு இங்கே வரவில்லை. ஏதோ ஒன்று என்னை இங்கே கொண்டுவந்து இருத்தியது . எல்லாம் திருவருள் என்றார் பகவான்.



அன்றுமுதல் இப் பெரியாரின் உபதேசம் நாடெங்கும் பரவி இந்தியாவுக்கு அப்பாலும் புகழ் பெறத்தொடங்கியது. மகரிஷிகள் இங்கே வந்தபோது சிவலிங்கத்தின் மேல் ஒரு கூரைக்கட்டிடமே இருந்தது. பிறகு வேறு சில கூரைக் கட்டிடங்கள் ஏற்பட்டன. நல்ல வேளையாகத் தண்ணீர் வசதியும் கிடைத்தது. இது ஒரு சுவாரசியமான விடயம். அன்னையை அடக்கம் செய்த சில நாளைக்கெல்லாம் பக்தர்கள் ஸ்தலத்தைத் தேடி அலைந்து கொண்டிருந்தனர். மகரிஷிகள் அவர்களுக்குப் பக்கத்தில் உள்ள ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டினார்.

அங்கே மண்ணைக்கிளறி இரண்டு மூன்று அடிஆழம் தோண்டுவதற்கு முன்னரே வற்றாத ஓர் இனிய ஊற்று தென்பட்டது. இதன் பின் தண்ணீர் வசதிக்குக் குறைவே இல்லை. ஸ்ரீ மகரிஷிகள் 20 ஆண்டுகளுக்கு மேல் வீற்றிருந்த பழைய ஹால் என்று அழைக்கப்படும் மண்டபந்தான் முதல் முதலாக இங்கே ஏற்பட்ட செங்கற் கட்டிடம். இதைக் கட்டுவதற்கு முன்னால் ஆச்சிரமவாசிகள் கடும் சோதனைக்கு உள்ளாயினர்.


### கள்வரிடமும் கருணை

பக்தர்கள் பலவிதமான காணிக்கைகளுடன் வந்து செல்வதைக் கண்ட சில தீயர்கள் ஆசிரமத்தில் நிரம்பப் பணம் இருக்கும் என்று எண்ணினார்கள். 1924ம் ஆண்டு ஜுன் மாதம் 26ம் திகதி மூன்று திருடர்கள் அங்கே சென்றனர். மகரிஷிகளும் மற்றவர்களும் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தனர். அப்பொழுது மணி இரவு 11.30. திருடர்கள் ஜன்னல் கண்ணாடிகளை உடைக்கத்தெடங்கியதும் மகரிஷிகள் விழித்துக்கொண்டார். **வேண்டுமானால் தாராளமாக உள்ளே வந்து வேண்டுவதை எடுத்துச்செல்லலாமே ! கதவு திறந்து தான் இருக்கிறது** என்று திருடர்களிடம் சாவதானமாகக் கூறினார். ஆனால் திருடர்கள் அதைச் சட்டை செய்யாமல் ஜன்னல் சட்டங்களைப் பெயர்க்கத் தொடங்கினார்கள். இதைக்கண்ட ஆச்சிரம வாசிகள் சிலர் வெளியே போய்த் திருடர்களைப் பிடித்து கட்டிப்போட்டு வருகிறோமென்று புறப்பட்டனர். ஆனால் மகரிஷிகள் அவர்களைச் சாந்தப்படுத்தி இதோபதேசம் செய்தார் .

***வேண்டாமப்பா! வேண்டாம்! திருடர்கள் ஏதோ அறியாமல் செய்கின்றார்கள்! நாம் நமது தர்மத்திலிருந்து தவறக்கூடாது. பொறுமையுடன் சாந்தமாக இருக்கவேண்டும். அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம்*** என்று தடுத்துவிட்டார். ஆகவே பக்தர்கள் மீண்டும் திருடர்களிடம் ***கட்டிடத்தை சின்னா பின்னப்படுத்த வேண்டாம் உள்ளே நுழைந்து வேண்டியதை எடுத்துச் செல்லுங்கள்*** என்று வேண்டிக்கொண்டனர். ஆனால் அம் முரடர்கள் காதில் இது ஏறவில்லை. குடிசைகளை யெல்லாம் தீவைத்துக் கொழுத்தி விடுவதாகப் பயமுறுத்தினர் . ***அப்படி யொன்றும் செய்ய வேண்டாம். நாங்கள் வெளியே போய்விடுகிறோம். நீங்கள் இஷ்டம் போல் தாரளமாக உள்ளே நுழைந்து வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்*** என்று மகரிஷிகள் கூறினார். திருடர்கள் சம்மதித்தனர். உடனே மகரிஷிகளது முதல் கவனம்

**சூட்டைத் தணிப்பது வில்வம், குளிர்ச்சியைத் தணிப்பது துளசி, இதனால் சிவாலயத்தில் வில்வமும், திருமால் கோயிலில் துளசி அர்ச்சனையும் நடைபெறும்**

நோயுற்றிருந்த கறுப்பன் என்ற நாயைக் காப்பாற்றுவதிலேயே சென்றது. திருடர்கள் அடித்துப் போட்டுவிடுவார்கள் என்று நினைத்துக் கருப்பனைப் பத்திரமான இடத்துக்கு அப்புறப்படுத்திவிட்டுக் மூண்டு தடியை ஓங்கி மகரிஷிகளைப் பயமுறுத்தி உன் பணம் எல்லாம் எங்கே? எங்கே வைத்திருக்கிறாய்? என்று கேட்டனர். பிச்சை எடுத்துண்ணும் சாதுக்களிடத்தில் பணம் ஏது? என்று மகரிஷிகள் சாந்தமாகப் பதில் சொன்னார். ஆனால் திருடர்கள் இதை நம்பவில்லை. கட்டிடத்தின் மூலை முடுக்குகளை எல்லாம் ஆராயத் தொடங்கினார்கள்.



ஹாலில் மகரிஷிகள் வழக்கமாக உட்காரும் விதம்

சரி நீங்கள் உங்கள் உடம்பில் உள்ள காயங்களை கவனித்துக் கொள்ளுங்கள் என்று பக்தர்களை நோக்கிச் சொன்னார். அப்போது சுவாமி சங்கதி என்ன? என்று பரிவுடன் கேட்டார் ராமகிருஷ்ணன் என்ற பக்தர். சுவாமிக்கும் சரியான பூசை தான் என்று மகரிஷிகள் சிரித்துக்கொண்டே சாவதானமாகக் கூறினார். இதைச் செவியேற்ற பக்தர் மனம் கலங்கியது. இடது தொடையிலே பலமான காயம் பட்டிருப்பதைக் கண்ட அவ்வன்பர் சினம் கொண்டு பக்கத்தில் கிடந்த கட்டை ஒன்றை எடுத்துக்கொண்டு உள்ளே போய் அந்த பயல்களை ஒரு கை பார்த்து வருகிறேன் என்று கிளம்பினார்.

ஆனால் சாந்த மூர்த்தி மீண்டும் அவரைத் தடுத்தார் ***கூடாது அப்பா கூடாது நாம் சாதுக்கள் அல்லவா? நமது தர்மத்தைக் கைவிடலாமா? நீ போய் அவர்களை அடித்தால் ஏதாவது உயிர் சேதம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். அப்போது பழி யார் மீது விழும்? நம்மையன்றோ சாரும்? அவர்கள் தெரியாதவர்கள். அறியாமையில் மூழ்கியவர்கள். ஆனால் அறிந்த நாம் நமது தர்மத்தையே கடைப்பிடிக்கவேண்டும். ஒருவேளை நாமே நாக்கை கடித்துக்கொள்கின்றோம். அதற்காக பல்லை உடைத்து எறிந்து விடுகிறோமா ?***

கூடவிருந்த மூன்று பேருடன் கூடத்தை விட்டு வெளியேறினார்.

வாயிலைத் தாண்டிய போது ஒவ்வொருவருக்கும் பலமான அடி விழுந்தது. மகரிஷிகளும் இடது துடையில் அடி வாங்கினார். உடனே அவர் அங்கேயே நின்று கொண்டு வேண்டுமானால் மற்றோர் காலிலும் அடிக்கலாம் என்று சாவதானமாகக் கூறினார். ஆனால் நல்ல வேளையாகத் திருடர்கள் அதற்கு மேல் அடிக்கவில்லை.


ஆச்சிரம வாசிகள் பக்கத்திலிருந்த விடுதியில் போய் உட்கார்ந்ததும் உள்ளேயிருந்து திருடன் ஒருவன் வந்து விளக்கு ஒன்று வேண்டும் என்று கேட்டான். அதையும் கொடுக்குமாறு அருள் வள்ளலாம் மகரிஷிகள் உத்தரவிட்டார். ஆனால் திருடப்படக்கூடிய பொருள் ஒன்றும் அங்கே இல்லை. அகப்பட்டதெல்லாம் சேர்ந்து பத்து ரூபாய் ரொக்கம். அதுவும் வெளியூர்க்காரர் ஒருவர் வைத்திருந்த ரொக்கப்பணம். திருடர்களுக்கு இது பெரிய ஏமாற்றமாயிற்று. கோபம்

***அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார், மடக்கொடியாரோடு மந்தணங் கொண்டார்***
***இடப் பக்கமேயிறை நொந்ததே என்றார், கிடக்கப் படுத்தார் கிடந்து ஒளிந்தாரோ*** – *திருமந்திரம்*

என்றார். .திருடர்களின் வேலை நடந்து கொண்டிருந்த போது இவ்வாறு சாந்த மொழிகளால் பக்தர்களை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார். கொள்ளையும் முடிந்தது. இரவு இரண்டு மணிக்குமேல் கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு கள்வர் போய் விட்டனர். பின்பு அவர்கள் பிடிபட்டுத் தண்டனை அடைந்தனர். திருடர்களின் கொடுமை நடந்து கொண்டிருந்தபோது நோயுற்றிருந்த நாயின் மீதே மகரிஷிகளின் முதல் கவனம் சென்றதென முதலில் கூறினோம். மகரிஷிகளின் கருணையையும் அன்பையும் விளக்குவதற்கு இது ஓர் உதாரணம். தினசரி வாழ்விலும் இப்படித்தான் நாய், பசு, அணில் ஜீவராசிகளையும் மனிதர் போலவே பாவித்து நடாத்துகின்றார். புதிதாக வருபவர்களுக்கு இது ஒவ்வொரு சமயம் ஆச்சரியத்தை உண்டு பண்ணும். பசங்கள் என்று மகரிஷிகள் சொல்வதைக்கேட்டு யாரோ சில சிறுவர்களைக் குறிப்பதாகப் பலர் ஏமாறுவதுண்டு. ஆனால் அவர் குறிப்பது மானிடச்சிறுவர்களை அல்ல. நாய் அணில் போன்ற குழந்தைகளைத்தான். எல்லாம் அவருக்குச்சமமே. மிருகங்களை அது என்று குறிப்பதே இல்லை. ஆச்சிரமத்துக்குள் அவைகளை அவமரியாதையாகவோ அன்பின்றியோ நடத்துவதைக் கொஞ்சமும் பகவான் சகிக்கமாட்டார்.

அந்த உடல்களுக்குள் எந்த எந்த ஆத்மாக்கள் இருக்கின்றனவோ! பூர்வ கர்மத்தின் எப்பாகத்தை முடிப்பதற்காக நம்மை அவை அடுத்திருக்கின்றனவோ! யாருக்குத் தெரியும் ? என்று அடிக்கடி கூறுவார்.

கிழங்குகளும் சேகரிப்பாள் அக்கிழவி. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடமிருந்து சாமக்கிரிகள் கிடைத்துவிடும். மலைக் கோவிலின் மூலையில் ஓர் அடுப்புப் போட்டுச் சமைத்து சமைத்த கீரையைச் சுவாமியிடம் எடுத்துக்கொண்டு போவாள். கொஞ்சம் கீரை கொண்டு வந்திருக்கிறேன் சுவாமி சாப்பிடணும் என்று அன்புடன் அளிப்பாள். ஆனால் உண்மையில் கொண்டு வந்திருப்பது கொஞ்மாக இருக்காது. சுவாமியும் மகிழ்வுடன் அனைத்தையும் உண்பார். ஒவ்வொரு சமயம் சுவாமியே கிழவியின் இடத்துக்குச் சென்று ஒத்தாசை செய்வதுண்டு. சிலகாலத்துக்கு முன் தான் இப் பெண்மணி கால கதி அடைந்தாள். ஆச்சிரமத்திற்கு அருகிலேயே இவளை அடக்கம் செய்திருக்கின்றனர். இந்தக் கீரைக்கிழவி தான் லக்ஷ்மியாக வந்திருக்கிறாள் என்பதே அந்த நம்பிக்கை. ஆச்சிரமத்தின் கட்டிடங்களுக்குள் அச்சமயம் விசாலமானது கோசாலை. அங்கேதான் லக்ஷ்மிக்கு எப்போதும் வாசம். எதற்கும் நான்தான் முதல் என்று



ஜீவகாருண்யம்

## லக்ஷ்மி

ஆச்சிரமத்தில் இருந்த இத்தகைய உயிர்களுள் சிறந்தவள் லக்ஷ்மி என்னும் பசு. சில வருடங்களுக்கு முன் அவள் தாயாரை ஆசிரமத்திற்குப் பரிசாக ஒரு பக்தர் அளித்தார். லக்ஷ்மியும் ஆசிரமத்திற்குப் பல கன்றுகளை ஈன்றளித்திருக்கிறாள். சிலகால் அவள் மகரிஷிகளின் ஜெயந்தியன்றே கன்றை ஈன்றிருக்கிறாள். லக்ஷ்மியைப் பற்றிப் பக்தர்களிடையே பொதுவாக ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது. சில வருடங்களுக்கு முன் மகரிஷிகளுக்கு ஒரு கீரைப்பாட்டி உணவளித்து வந்தாள். மலை ஊர் எல்லாம் அலைந்து கீரையும் காய் வருவதில் லக்ஷமிக்கு இணை ஒருவரும் இல்லை. கோசாலை ஆரம்ப வைபவத்தின் போது இத்தகைய ருசிகரமான சம்பவம் ஒன்று நடந்தது. உதய லக்னத்துக்குச் சில நாழிகைக்கு முன்னரே லக்ஷ்மியின் ஆர்ப்பாட்டம் தொடங்கிற்று. கட்டின இடத்தில் தங்க மறுத்தாள். அவிழ்த்து விட்டவுடன் நேராக மகரிஷிகள் இருப்பிடத்துக்குள் நுழைந்து வெளியேற மறுத்து விட்டாள். ஆசிரம வாசிகள் அங்கிருந்து அவளை வெளியேற்ற முயன்றனர். வேண்டாம் வேண்டாம் இருக்கட்டும். தன் அரண்மனைக்கு என்னை

**விளக்கினை ஏற்றி வெளியை அறிமின், விளக்கினின் முன்னேவேதனை மாறும்**
**விளக்கை விளக்கும் விளக்குடையார்கள், விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே –திருமந்திரம்**

அழைத்துப்போக அல்லவா வந்திருக்கிறாள்? என்று மகரிஷிகள் பரிந்து பேசினார்.

அப்போது நடந்ததும் அப்படித்தான். குறித்தநேரம் வந்ததும் கோசாலைக்கு மகரிஷிகளுக்கு வழிகாட்டுவது போல முன்னே நடந்தாள் லக்ஷ்மி. கதவைத் திறந்ததும் கோசாலைக்குள் பசுக் கூட்டங்களுக்கெல்லாம் தலைமையாக உள்ளே நுழைந்தது லக்ஷ்மிதான்.

இத்தகைய புனித வாழ்வு வாழ்ந்து வந்த லக்ஷ்மி 18–6–1948 வெள்ளிக்கிழமை அன்று பகவான் முன்னிலையில் முத்தியடைந்தாள். அவளது புனிதவுடல் பகவான் 20 வருடங்களாக வீற்றிருந்த ஓட்டுக் கட்டிடத்துக்கு நேரில் சமாதி செய்யப்பட்டதுடன் லக்ஷ்மியின் தத்ரூப சிலாவிக்கிரகம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. பகவானே லக்ஷ்மியின் முக்தியைப் பற்றி வெண்பா ஒன்று பாடிஅருளினார். அவ் வெண்பாவும் சிலையுருவத்தின் மேலே கருங்கற்பலகையில் செதுக்கப் பெற்றுப் பதிக்கப் பெற்றுள்ளது. விசேடகாலங்களில் லக்ஷ்மியின் சமாதிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. தற்போதுள்ள ஆசிரமத்துக்கு வந்தபின் மகரிஷிகளின் நாய் குரங்கு முதலாகிய நண்பர்களின் கூட்டம் மிகவும் குறைந்து விட்டது. ஆனால் மலை மேல் இருந்த போது நாய்களும் குரங்குகளும் அவருடன் அளவளாவிப் பழகிவந்தன.

## சின்னக்கருப்பன்

இதில் சின்னக்கருப்பன் என்னும் நாயைப் பற்றி மகரிஷிகள் பின்வருமாறு கூறுகின்றார். சின்னக் கருப்பன் மிக மேன்மையான குணங்களை உடையவன். விருபாக்ஷ குகையில் இருக்கும் போது ஏதோ கறுப்பு உருவம் தூரத்தில் போவதை அடிக்கடி பார்த்தோம். சில சமயங்களில் புதருக்கு மேல் தலைமட்டும் நீட்டிக் கொண்டிருப்பது தெரியும். ஆனால் பக்கத்தில் வருவதே இல்லை. சின்னக்கருப்பனின் வைராக்கியம் தீவிரமிக்கது. ஒருவரிடமும் அவன் நெருங்குவதில்லை. ஆள் உள்ள இடம் அவனுக்கு ஆகாது போலத்தோன்றியது. நாங்களும் அவனுடைய சுயேச்சையையும் வைராக்கியத் தையும் மதித்து அந்த இடத்தில் உணவை வைத்துவிட்டு தூரப் போய்விடுவோம். இப்படி நடந்து கொண்டிருக்கையில் ஒருநாள் எல்லோரும் மலை மேல் ஏறிப்போனபோது கருப்பன் பாதைமேல் திடீரென்று பாய்ந்து சந்தோசத்துடன் வாலைக்குழைத்துக் கொண்டு என்மேல் விழுந்து விளையாட ஆரம்பித்தான். மற்றவர்களை எல்லாம் விட்டு என்னை மட்டும் கருப்பன் குறிப்பாகக் கண்டுகொண்டதை யாவரும் வியந்தனர்.

இதற்குப்பின் கருப்பன் ஆசிரமவாசி ஆகிவிட்டான். அத்தியந்த நண்பன் உபகாரி மேன்மையான குணம். இதற்கு முன்பிருந்த கூச்சமெல்லாம் அபார அன்பாக மாறியது. எல்லோரையும் சகோதரமாகப் பாவித்து வருவோர் போவோருடன் அன்பாகப் பழகி மடி மீது ஏறித் தாவிக் குலாவுவான். எல்லோரும் அனேகமாக அவனுடன் பிரியமாகவே இருந்தனர். ஆனால் சிலர் மட்டும் கருப்பனைக் கண்டால் சற்று விலகிச் சென்றனர். அவர்களையும் அவன் எளிதில் விட்டு விடுவதில்லை. எந்த வெறுப்பையும் முடிவாக எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் போ என்று சொல்லிவிட்டால் வேறு பேச்சின்றி சாதுவாக வெளியேறி விடுவான்.

ஒருநாள் குகைக்கு அருகிலிருந்த வில்வ மரத்தடியில் ஒரு வைதிகப் பிராமணர் ஜபம் செய்துகொண்டிருந்தார். சின்னக்கருப்பன் அவருக்கு வெகு சமீபத்தில் சென்றுவிட்டான். நாய் என்றால் தீட்டு என்பது வைதிகரின் நம்பிக்கை. நாயைக் கண்டால் கூடச் சற்று விலகி தூரத்தில் போவது வழக்கம். ஆனால் கருப்பன் அநுஷ்டிப்பதும் அவனுக்குத் தெரிந்ததும் இயற்கை நிதியான சமத்துவந்தான். ஆகவே துரத்தினால் கூடக்கருப்பன் அந்த இடத்துக்கே திரும்பிச்சென்று கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஆசிரம வாசி பிராமணரின் சங்கடத்தைத் தவிர்க்கும் நிமித்தம் மெதுவாக ஓர் அடி கொடுத்தார். கருப்பன் ஊளையிட்டுக் கொண்டு ஓட்டமெடுத்தான். அதன் பிறகு கருப்பனைக் காணவே இல்லை. ஏதோ ஒருதடவையாக இருந்தால் கூட தன்னை அவமதித்து அடித்த இடத்தைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டான் கருப்பன்.

மற்றோர் நாயும் இவ்வாறே மிகுந்த ரோஷத்துடன் நடந்து கொண்டது. ஆசிரமவாசி ஒருவர் வைதுவிட்டார் என்பதற்காக நேரே சங்க தீர்த்தத்துக்கு ஓடிப்போய் விழுந்து உயிரை மாய்த்தது. மற்றோர் ஆச்சர்யமான நாய் கமலா. இதோ பார் இவர் புதியவர் இவரைக் கூட்டிக்கொண்டு போய் எல்லாவற்றையும் காட்டிவிட்டுவா என்பார் மகரிஷி. கமலா உடனே புறப்படுவாள். மலையைச்சுற்றி எல்லாவற்றையும் புதிதாக வந்தவர்க்குக் காட்டிவிட்டுத் திரும்புவாள்.

ஜாக் என்பவன் வேறுவகை. அவன் பெரிய தபஸ்வி.

**ஆசை அறுமின் ஆசை அறுமின் , ஈசனோடாயினும் ஆசை அறுமின்**
**ஆசை படப்பட ஆய்வரும் துன்பம், ஆசை விட விட ஆனந்தமாமே – திருமந்திரம்**

குறிப்பிட்ட வேளைகளில் அதுவும் அநேகமாகச் சுவாமி பிரசாதங்களைத்தான் அவன் புசிப்பான். மிகுந்த நேரங்களில் மகரிஷிகளின் அருகில் நிச்சலமாக வீற்றிருப்பான். மலையின் மேல் குரங்குகளுக்குக் குறைவில்லை. மகரிஷிகளுக்கு இவைகள் மீது மிகுந்தபிரியம்.

குரங்குகளுக்குள் ஒரு கண்டிப்பான திட்டம் உண்டு. மனிதர் தம்மைத் தொடவிடும் வானரங்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்வதில்லை. ஆனால் இந்த விதிக்கு மகரிஷிகள் மட்டும் விலக்கு! இதோடு நில்லாமல் மகரிஷிகளுக்கு மற்றோர் உயர்ந்த கௌரவமும் கிடைத்தது. காயமடைந்து கிடந்த நொண்டிக் குரங்கு ஒன்றை மகரிஷிகள் எடுத்து வளர்த்துக் காப்பாற்றினார். தங்களுக்குள்ளே பலம் மிகுந்த ஒருவனையே குரங்குகள் ராஜாவாகத் தேர்ந்தெடுப்பது வழக்கம். ஆனாலும் மகரிஷிகளின் அன்பைப் பெற்ற அந்த நொண்டிக் குரங்கையே மற்ற வானரங்கள் ராஜாவாகக் கொண்டன.

இதைத்தவிர வானர யுத்தங்களைத் தடுத்து மத்தியஸ்தம் செய்து வைக்கும் உரிமையும் அவருக்கு உண்டு. காட்டுப்புறங்கள் வெவ்வேறு கூட்டங்களுக்கென பிரித்து வைக்கப்பட்டிருக்கும். ஒரு கூட்டத்தின் எல்லையில் மற்றோர் வானரக்கூட்டம் சென்றால் சண்டை ஏற்பட்டுவிடும். இதைத் தூதர் மூலம் தீர்த்துக்கொள்வதும் உண்டு. சமரசம் ஏற்படாவிட்டால் வெகு கோரமான வானரயுத்தம் தான். மகரிஷிகள் மலை மீதிருந்த வரைக்கும் இந்த யுத்தங்கள் வெகு அபூர்வமாக இருந்தன. தகராறு ஏற்பட்டால் அவர் இரு கட்சியையும் அழைத்துச் சமாதானம் செய்து அனுப்பிவிடுவார்.

இந்தவானர நண்பர்களைப் பற்றி மகரிஷிகள் எத்தனையோ கதைகள் சொல்வது உண்டு. ஒரு குரங்குக் கூட்டத்தைச் சேர்ந்த இரண்டு குரங்குகளை ராஜா பிரஷ்டம் செய்து தள்ளி வைத்துவிட்டானாம். இதனால் வானரங்களுக்குள் மிகுந்த கிளர்ச்சி ஏற்பட்டது. அதிருப்தி அதிகரித்தது. வனராஜ்யத்திலே பகிரங்கப்புரட்சி ஏற்படும் நிலைமைக்கு முற்றிவிட்டது. திடீரென ராஜா மறைந்து விட்டான். இரண்டு வாரம் வரைக்கும் தலை காட்டவில்லை. பின்பு ஒருநாள் திடீரென்று தோன்றிக் கலகத் தலைவர் எல்லோரையும் அறை கூவி அழைத்தான். ஆனால் எதிர்த்து நிற்கும் தைரியம் ஒருவருக்கும் இல்லை. யாவரும் பயந்து பணிந்து விட்டனர். இரண்டுவாரத் தபசின் பலன் அது என்று கூறுவார் மகரிஷி. சிறு சேஷ்டை செய்த குரங்குகள் கூட உடனே மகரிஷிகளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும். பொதுவாக எல்லாக் குரங்குகளும் மகரிஷிகளிடம் மிகவும் அன்பாகவும் நன்றியுடனுந்தான் நடந்து வந்தன.

ஒருநாள் கடும் வெயிலில் மகரிஷிகள் சில பக்தர்களுடன் வெகுதூரம் நடந்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். வெய்யில் கொடுமையுடன் பசியும் தாகமும் அதிகரித்தன. பக்கத்தில் எங்கும் தண்ணீரே இல்லை. அந்த வழியே ஒரு குரங்குக் கூட்டம் போய்கொண்டிருந்தது. அவை மகரிஷிகளையும் பக்தர்களையும் பார்த்ததும் நிலையை எப்படியோ ஊகித்து உணர்ந்து கொண்டன போலும் ! உடனே பக்கத்தில் இருந்த நாவல் மரத்தின் மீது தாவி கிளைகளைக் குலுக்கிப் போதுமான நாவற் பழங்களை உதிர்த்து விட்டுப் பேசாமல் இறங்கிப் போய்விட்டன. அந்தக்கூட்டத்தில் ஒருகுரங்கு கூட அந்தப் பழங்களைத் தின்னவில்லை!

அபாயமான ஜந்துக்களிடமும் மகரிஷிகள் சினேகமாகவே இருந்திருக்கிறார். மகரிஷிகளின் குகைகளில் எத்தனையோ பாம்புகள் வசித்து வந்தன. அவைகளின் வீட்டுக்கல்லவா நாம் வந்திருக்கிறோம்? அவைகளைத் தொந்தரவு செய்யவோ துன்புறுத்தவே நமக்குச் சிறிதும் உரிமை இல்லை. அவைகள் நம்மை ஒன்றும் செய்யமாட்டா என்று மகரிஷிகள் அடிக்கடிகூறுவார். ஒருநாள் மகரிஷிகள் மலை மீது ஒருகாட்டுப் பாதையில் சென்று கொண்டிருந்தார். ஒரு குளவிக் கூட்டை இடது கால் மிதித்து விட்டது. உடனே குளவிகள் துரத்திக்கொண்டு வந்து அதே காலில் கொட்டின. வேணும் வேணும் கூட்டைக் கலைத்தது இந்தக் கால்தானே என்று கூறிக் குளவியின் ஆத்திரம் தீரக் கொட்டித்திரும்பும் வரை அசையாமல் அங்கேயே அமர்ந்திருந்தார்.

## இலக்கியங்கள்

கடந்த பல ஆண்டுகளில் மகரிஷிகளைப் பற்றி வெளி வந்துள்ள நூல்கள் பல. முதல் முதலில் மகரிஷிகளின் சரித்திரத்தைச் சிறந்த முறையில் எழுதியவர் ஸ்ரீ நரசிம்ம சுவாமி. இவர் பூர்வாசிரமத்தில் சேலம் வக்கீல் பி வி நரசிம்மஜயர் என்று கீர்த்தி பெற்றவர். பின் உலக வாழ்க்கையிலிருந்து விலகி ரமணாசிரமத்தை அடைந்து ஒரு குகையில் வாசங்கொண்டு Self Realisation என்னும் புத்தகத்தின் மூலம் வெளியுலகுக்கு மகரிஷிகளின் பூரண மகிமையை

**முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள், அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்**
**மகட்குத் தாய் தன் மணாளனோடு ஆடிய, சுகத்தை கூறெனிற் கூறுவதெங்ஙனே – திருமந்திரம்**

உணரும் பாக்கியத்தை அளித்தார். இந்த ஆங்கில நூல் பல பதிப்புக்கள் அச்சிடப்பெற்று வருகிறது. ஸத்தர்சன பாஷ்யம் என்பது மற்றோர் சிறந்த நூல். ஸ்ரீஅரவிந்த ஆசிரமத்தைச் சார்ந்த கபாலி சாஸ்திரியார் இயற்றியது. இவர் காவ்யகண்ட கணபதி முனிவரின் அத்தியந்த பக்தருமாவார். வெகு காலத்துக்கு முன்பே மகரிஷிகளின் மகிமையை உணர்ந்து அடுத்து அருள் பெற்றவர். மகரிஷிகளின் உபதேசத்தைப் பற்றி இவருக்குள்ள அறிவும் அனுபவமும் இந்தப் புத்தகத்தின் மூலம் காணக்கிடக்கின்றன. அதிலும் மகரிஷிகள் வாக்கு என்னும் பகுதி படித்தவர், பாமரர் முதலிய யாவர்க்கும் பல சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதில் மிகவும் உபயோககரமானது.

ஸ்ரீ சுத்தானந்த பாரதி ஸ்ரீ ரமண விஜயம் என்று தமிழில் விஸ்தாரமான சரித்திரம் ஒன்று எழுதியுள்ளார். சமீபத்தில் தெலுங்கு, ஹிந்தி, குஜாரத்தி, வங்காளம், மலையாளம், ஸம்ஸ்கிருதம், கன்னடம் இன்னும் பல மொழிகளிலும் ஸ்ரீபகவானதுசரித்திரமும் உபதேசங்களும் பல அன்பர்களால் எழுதிப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ மகரிஷி என்னும் இந்த நூல் சென்னை வாரப்பத்திரிகை சண்டே டைம்ஸ் ஆசிரியராக இருந்து காலஞ் சென்ற ஸ்ரீ காமத் அவர்களின் முயற்சியால் ஆங்கிலத்தில் வெளிவந்தது. பின்னர் அவரே அதை ஹிந்தி, தெலுங்கு, தமிழ் மொழிகளிலும் எழுதுவித்து வெளியிட்டார். பிறகு மலையாளத்திலும் குஜாராத்தியிலுங்கூட இது வெளியாயிற்று.

வெளிநாட்டாருக்கு மகரிஷிகளின் மகிமையை முதன் முதல் உணர்த்தியது பால்பிரன்டனின் A Search in Secret India என்னும் நூல். மேல் நாட்டார் பலர் இந்நூலால் மகரிஷிகளை நாடிவரத் தொடங்கினர். ஸ்ரீ ரமண மகரிஷிகளைப் பற்றி ஆங்கில மொழியில் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. பல நூல்களின் வாயி லாக ஸ்ரீ பகவானின் வாழ்வும் வாக்கும் லண்டன் ரைடர் அண்டு கோ.வினால் வெளியிடப்பட்டு வருகிறது. அவை பலநாட்டு அன்பர்களால் ஆர்வத்துடன் படிக்கப்பட்டு அருணாசலமான அருட்காந்தத்தால் அவர்கள் ஈர்க்கப்படக் காரணமாகிறது.

ஸ்ரீபகவானின் உபதேசங்களைப் படித்துப் பயில விரும்புவோர் உருவில் சிறிதேயாயினும் அகக்கருத்தில் மிகுந்த நான் யார்? முதல் ஸ்ரீ மகரிஷிகளுடன் உரையாடல் முதலிய அரிய பெரிய நூல்களைப் பெற்றுப் பேரருள் எய்தலாம். இந்நூல்களின் பயனாக வெளிநாட்டார் பலர் ஆசிரமத்துக்கு வரத்தொடங்கினர்.

ரமணாசிரமம் நாளுக்குநாள் விரிவடைந்து வருகிறது. ஏற்கனவே பல கட்டிடங்களும் குடில்களும் இருக்கின்றன. வந்தவர்கள் தங்குவதற்குப் போதிய இடம் இருக்கிறது. ஆசிரமத்தில் நீடித்துத் தங்க விரும்பும் பக்தர்களுக்காகக் கட்டியுள்ள விடுதிகள் பலவும் இருக்கின்றன. யோகி ராமையா என்னும் பக்தர் ஞான மார்க்கத்தில் வெகு காலம் சாதனம் செய்தவர் நெல்லூர் ஜில்லாவில் அவருக்கு மிகுந்த செல்வாக்குண்டு. ஆச்சிரமத்துக் கைங்கரியம் மிகச்செய்தவர். பல வருஷங்கள் மௌனமாகவும் பிறகு சஹஜமாகவும் இருந்த அன்னார் 12-2-1962 ல் ஸித்தியடைந்தார்.

மேஜர் சாட்விக் என்னும் ஆங்கிலேயரும் ஆசிரமத்திலே தங்கியிருந்தார். இவர் ராணுவத்தில் உயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர். ஸ்பெயின் தேசத்தில் சஞ்சாரம் செய்தபோது ஸ்ரீ பால் பிரான்டனின் புஸ்தகத்தைப் படித்து மகரிஷிகளின் மகிமையை உணர்ந்து இந்தியாவுக்கு விரைந்து வந்தார். ஸ்ரீ மகரிஷிகளை விட்டுப் பிரியாது ஸ்ரீசாது அருணாசலா என்னும் நாமத்துடன் (25 ஆண்டுகளுக்கு மேல்) ஆசிரமத்தில் தங்கியிருந்த அவர் 17-4-1962 அன்று விதேகரானார். ஒரு சாதுவின் சிந்தனைகள் என்பது அவர் எழுதிய ஒரு தெளிவான நூல். இதைத் தவிர ஓழிந்த போதெல்லாம் ஆசிரமத்துக்கு வந்து போகும் பக்தர்களின் தொகை கணக்கில் அடங்காது. இவ்வாறு இவர்கள் வருவதற்கு காரணம் என்ன? இவர்களை இழுக்கும் காந்தம் யாது? இதற்குத் திட்டமான பதில் கூறப் பெரும்பாலும் ஒருவராலும் முடியாது . ஆனால் ஆசிரமத்தில் தங்கும் போது அளவற்ற ஆனந்தமும் சந்துஷ்டியும் ஏற்படுகின்றன என்பதை அனைவரும் ஒருமனதாக ஒப்புக்கொள்வார்கள்.

ஸ்ரீ பால் பிரின்டன் குறிப்பிடுவது போல் வெளிக்குத் தெரியாத சந்தடியற்ற வற்றாத சஞ்சீவி அலைகளின் மூலம் சஞ்சலம் என்ற நோய்வாய்ப் பட்டுத் தவிக்கும் இதயங்களுக்கு ஸ்ரீ மகரிஷிகள் ஆறுதல் தருகிறார்.

அவருக்கு அருகே இருந்த பின் ஆத்ம ஜோதி பிரகாசியாமல் இராது. அந்த ஞானப்பிழம்பினின்று வரும் கிரணத்தினால் மனம் ஒளி பெறாமல் இருக்கமுடியாது. அவரது மனப்பான்மையையும் ஆத்ம விசார பக்தியையும் சரியாகப் புரிந்து கொண்டவருக்கு அவரது ஞானோபதேசம் யுக்தி யுக்தமானது என்று விளங்கும். அவர் சித்திகள் எதையும் காட்டி

**தனக்கென்று உருவம் ஒன்றில்லை என்றாலும் எல்லா உயிரிடத்தும் அலையலையாய் தோற்றம் காட்டியும் எல்லா உயிரின் உணர்வுகளுக்கும் வித்தாகவுள்ள அருவப்பொருளே பரம்பொருள்.**

மயக்குவதில்லை குருட்டு நம்பிக்கை எதையும் நாம் கொள்ளவேண்டும் என்று கூறுவதுமில்லை. ஊடுருவிப் பாயும் இரட்டை நட்சத்திரங்கள் போல் அவர் விழிகள் இரண்டும் ஜொலிக்கின்றன. பகவானைத் தரிசனம் செய்ய 1938ஆம் ஆண்டில் பிரபல தேசியத்தலைவர்களான பாபு ஸ்ரீ ராஜேந்திரப் பிரசாதும் ஜம்யாலால் பஜாஜ் அவர்களும் வந்து ஒரு வாரம் ஆசிரமத்தில் வந்து தங்கினார்கள். அப்போது ஸ்ரீ பஜாஜ் பகவானைச் சில கேள்விகள் கேட்டார்

**பஜாஜ் :** சுய ராஜ்யம் அடைய இச்சை கொள்வது சரிதானா?

**மகரிஷிகள்:** ஆகா! உன்னத இலட்சியத்துக்காகக் கொள்ளும் நீண்டகால உழைப்பு தேசபக்தனின் திருஷ்டியை விசாலப்படுத்திப் படிப்படியாக அவனை தேசத்தோடு ஒன்றுபடச் செய்கின்றது. இப்படியே ஆத்மா சமஷ்டியோடு ஒன்று படுதல் மிகவும் நல்லதே. அதற்காகச் செய்யும் கர்மமும் நிஷ்காமியமே ஆகும்.

**பஜாஜ் :** அரும் பெரும் தியாகம் செய்து நீண்ட காலம் போராடி அடையும் சுயராஜ்யத்தைக் கண்டு சந்துஷ்டியும் பெருமையும் கொள்ளலாகாதா?

**மகரிஷி:** கூடாது இந்தப் போரில் ஜயம் அடைய வேண்டுமானால் உலகுக்கு உடையவனான ஈசுவரனை சதா ஸ்மரித்துக் கொண்டு அவனைச் சரணடைய வேண்டும். தெய்வ அநுக்கிரகத்தால் வெற்றிய டைந்தவன் அகந்தையுடன் எப்படி பெருமை பாராட்டிக் கொள்ள முடியும்? தன் உழைப்பின் பயனையும் கருதக்கூடாது. அவ்வித உழைப்பே நிஷ்காம்ய கர்மமாகும்.

**பஜாஜ்:** தேச பக்தனுக்கு நெறி தவறாமை எப்படிக் கைகூடும்?

**மகரிஷி:** தான் சரண் புகுந்த தெய்வம் அல்லது குருவின் சக்தியே நெறி தவறாது அவனைக் காப்பாற்றும். அப்போது அவன் தன் மார்க்கத்தின் நேர்மையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. தலைவரின் சொல்லைத் தட்டி நடக்கும் போது தான் சந்தேகம் ஏற்படும்.

**பஜாஜ் :** (தேச பக்தனின் அரசியல் முயற்சிக்கும் தலைவரின் தெய்விக சக்திக்கும் உள்ள பரஸ்பர சம்பந்தத்தை அறியும் பொருட்டு கேட்கிறார்) சுயராஜ்யத்துக்காக உழைக்கும் தேசபக்தனுக்கும் பலம் அளிக்கும் ஒரு அருட்சக்தி இல்லையா?

**மகரிஷி:** (மௌனம்)

**பஜாஜ்:** ( தன் வினாவை விவரிக்கின்றார்) நம் பண்டைப் பெரியோர் செய்த தவமெல்லாம் நமக்குத் துணை புரியாவா?

**மகரிஷி:** புரியும். ஆனால் அந்த தவப் பயனெல்லாம் தனக்கே உதவியாக வேண்டும் என்று யாரும் உரிமை பாராட்டமுடியாது. தூயவர் அனைவருக்கும் அதில் பங்கு உண்டு. (சற்றுப் பொறுத்து) அகில பாரதத்திலும் தர்மத்தை அடிப்படையாகக்கொண்ட இந்த மகத்தான விழிப்பு அப்படிப்பட்ட அருட்சக்தியின் காரியமே அல்லவா?

இந்த சந்தர்ப்பத்தில் மகான்களுடைய தபோ பலத்தால் பொழிகிற அருட்சக்தி எவ்விதமாகத் தேசபக்தனுக்கும் தேசத்துக்கும் உதவி புரியும் என்பதை மகாத்மா காந்தியினுடைய வார்த்தையிலிருந்து தீர்மானிக்கலாம். மகாத்மா அவர்கள் 23–6–38 ல் வெளிவந்த ஹரிஜன் பத்திரிகையில் இவ்விதம் கூறியுள்ளார். ஜீவோத் பத்திக்குக் காரணமாகும் ஓஜஸ் சக்தியை நீரோதித்து ஊர்த்துவமுகமாக்குவதால்தான் எல்லா விதமான சக்திகளும் உண்டாகின்றன. இவ்விதம் ஓஜஸ் சக்தியை சிதிலமாக்காமல் சேர்த்து ஒருமுகப்படுதினால்தான் உத்கிருஷ்டமான கிரியா சக்தி சித்திக்கும். அப்படியின்றி துஷ்ட சிந்தனைகளுக்காவது ஒழுங்கற்று ஓடும் வீண் சிந்தனைகளுக்காவது இடங்கொடுத்தால் இந்த ஓஜஸ் சக்தியை நாம் இழந்து விடுவோம். இப்படி மகாத்மா சொல்வதன் கருத்து மனோ நிக்கிரகம் செய்யவேண்டும் என்பதே. பூரண மனோநிக் கிரகத்துக்கு நான் யார் என்ற ஆத்ம விசாரம் ஒன்றே உபாயம். மனம் என்பது எண்ணங்களின் கூட்டமே. அவ்வெண்ணங்கள் எல்லாவற்றுக்கும் மூலம் நான் என்னும் எண்ணமே. மனத்துக்கும் கிரியா சக்திக்கும் மூலம் ஒன்றேயாதலால் ஆத்ம விசாரத்தினால் ஒன்று படும் மனத்தில் ஓஜஸ் சக்தி பிராண சக்தியுடன் ஒன்றாகின்றது. மகாத்மா அவர்கள் மேலுங்கூறுவதாவது எண்ணங்களே எல்லாச் சொல்லுக்கும் செயலுக்கும் மூலம். ஆகையால் ஒருவனதுசொல்லும் செயலும் அவனது நினைப்பை ஒட்டியே இருக்கும். ஆகையால் மனோநிக்கிரகமே சர்வ உத்கிருஷ்டமான சக்தியாகித்தானாகவே தொழில் புரியும்

இருதயத்தில் எழும் மோன மொழி என்பது இதுவே என்று நான் கருதுகின்றேன்.

ராஜேன்பாபு பகவான் சந்நிதியில் ஐந்தாறு நாள் மௌனமாவே அமர்ந்திருந்து புறப்படும் அன்று மகரிஷிகளை ஒரேயொரு கேள்வி கேட்டார்.

**ராஜேன் பாபு:** மகாத்மா காந்தி இங்கே என்னை அனுப்பினார். இங்கிருந்து நான் அவருக்குக் கொண்டு போகக்கூடிய வார்த்தை ஏதேனும் உண்டா?

**மெய்யறிவே சிவமாகும்.அந்த அறிவை மறந்தாரும் மறுத்தாரும் சிவத்தைக் காணமாட்டார்கள். முத்தியும் பெறமாட்டார்கள்.**

மகரிஷி: இதயத்துடன் இதயம் பேசிக்கொண்டிருக்கும் போது வார்த்தைகளுக்குத் தேவை என்ன? இங்கே இயக்குவிக்கும் அதேசக்திதான் அங்கும் இயக்கு விக்கிறது.

## மகரிஷிகளின் சந்நிதி

ஞானப் பசி கொண்டோரையும் முத்திக்கு முயல்வோரையும் ஏதோ ஓர் அதிசய சக்தி ஸ்ரீ பகவான் முன்னிலைக்கு இழுக்கிறது. அவர்கள் பகவான் சந்நி தியில் பரம சுகத்தை அனுபவிக்கின்றனர். இப்படி ஈர்க்கப்பட்டவரில் ஒருவர் ஒரு அமெரிக்க மாது. இவ்வம்மையார் பல நூல்களை இயற்றியவர். பகவத்சந்நிதியில் இரண்டு மணிநேரம் தங்கி விடை–பெற்றுச் சென்றார். போவதற்கு முன் பகவானை நோக்கி என் தேசத்தை விட்டு வெகு தூரம் வந்தது தங்களை தரிசித்து என் ஹிருதய பூர்வமான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டுத்தான். சந்நிதியில் சிறிது நேரம் தான் தங்கினேன் ஆனாலும் பரமானந்தம் அடைந்தேன் என்றார்.

இம்மாது நேராகத் தாய் நாட்டுக்கே திரும்பினார். அவ்வாறு போகும் போது வழியில் கொழும்பில் இருந்து ஆசிரமத்துக்கு ஒரு கடிதம் எழுதினார் . அதில் தங்கள் சந்நிதியில் தங்கியிருந்த சிறிது நேரத்தில் அழியாத அற்புத அநுபவம் கிடைத்தது. இதற்காக என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்கு முன் சற்றேனும் அறியாத சாந்தியைப் பெற்றுத் திரும்புகிறேன் என்று எழுதியிருக்கிறார்.

ஒரு பிரெஞ்சு மாது–பாஸ்கலின் மாலெட் என்பவர் தம் நண்பர்களுடன் 1938 ஆம் ஆண்டு மகரிஷியைத் தரிசிக்க வந்தார். பிரான்சுக்குத் திரும்பிப்போய் கிழக்கே நோக்குங்கள் என்று (தன் யாத்திரையில் கீழ் நாட்டில் கண்டவற்றைத்திரட்டி) ஒரு நூல் வெளியிட்டார். அந்த நூலில் மகரிஷிகளின் சந்நிதியில் தாம் அடைந்த இன்பத்தைப் பின்வருமாறு விவரிக்கிறார். பகவானை இந்திய வழக்கப்படி வணங்கி அவர் முன் அமர்ந்தேன். சிறிது நேரத்தில் என்னை மறந்தேன். பகவானின் கம்பீர நிச்சல நிஷ்டை என்னைக் கவர்ந்தது. மறத்தற்கு இயலாத அமைதி அவர் முன்னிலையில் நிகழ்ந்தது. விண்மீன் போல் ஒளிவிடும் அவர் கண்களை உற்று நோக்கினேன். அப்போது தான் நித்தியப் பொருள் இன்னதென்று உணர்ந்தேன். உணர்ந்தவுடன் உணர்வு கடந்த இன்பத்தால் கவரப்பெற்றேன்.

## மறு நாள் கண்ட காட்சி

ஸ்ரீபகவான் ஜயந்தி மகோத்ஸவம் நடக்கப்போகிறது. தேவையான ஏற்பாடுகளைச் செய்வதில் அனைவரும் வெகு ஊக்கமாக இருக்கினறனர். தேசத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடிப் பகவத்தரிசனம் செய்து அவர் அவர் அனுக்கிரகத்தை அடைகிற விசேஷ தினம் அது . ஆகார வசதிகள் செய்யப்படும். பகவான் வீற்றிருந்த மண்டபத்தில் நாங்கள் புகுந்த போது அவர் ஏதோ எழுதிக்கொண்டும் கடிதங்களைப் படித்துக்கொண்டும் இருந்தார் . அவர் உலக சம்பவங்களை மிகக் கவனத்துடன் கண்காணித்து வருபவராகக் காணப்பட்டார். இத்தனையும் செய்துகொண்டிருந்தாலும் தேசகாலங் கடந்தவராக அறிவும் அறியாமையும் அற்றவராகத் துவந்துவ அதீதராக விச்வ ஹிருதயமாம் தன் மயத்தில் அமர்ந்திருப்பதாக நான் உணர்ந்தேன். இந்த உணர்வை வாய் கொண்டு உரைத்தல் முடியாது. இதை ருசுப்படுத்தவும் இயலாது. அதிசூக்ஷ்மமாய் அநுபவிக்கத்தான் கூடும். இதை மறத்தலும் இயலாது. எதிலும் ஒட்டுதல் இல்லாது உருவற்று தன் நிலையில் நிற்கும் இவரிடத்தில் கருணையும் ஒற்றுமை உணர்வும் பூரணமாகக் காணப்படுகின்றன. இவரை நாடிச் சாந்தியும் ஆறுதலும் அடையலாம் என்று நம்பிவரும் துயருற்ற ஜீவர்கள் சொல்லும் கணக்கற்ற சிக்கலான பிரச்சனைகளை அநுதாபத்துடன் அருள்கின்றார். செல்வர், வறியர் ஆண் பெண் சிறுவர் பெரியவர் அனைவரிடமும் சமதிருஷ்டி கொண்டவர் ஸ்ரீமகரிஷி.

உன்னை நீ விசாரித்தறி என்பதே ஸ்ரீமகரிஷியின் சுருதிவாக்கியம். ஆன்ம விசாரத்தையே அடிக்கடி வற்புறுத்தி அதுவே அநுபூதிக்கு இன்றியமையாத உபாயமென உபதேசிக்கின்றார். குருட்டு நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் கடந்த ஸ்வாநுபவ சாக்ஷாகாரத்துக்கு வழிகாட்டத்தான் எல்லா மதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அந்த மகோந்நத உண்மை நிலையை அடைந்துள்ள இவரை நாம் கண் கூடாகக் காணக் கிடைத்திருக்கும் போது மதக்கிரந்தங்கள் எவ்வளவு புனிதமானவையாக இருந்தபோதிலும் அவற்றால் நமக்கென்ன பயன் ? இந்த மகான் யார்? ஞான பூமிகளில் எதில் இவர் நிலைத்திருக்கிறார்? என்பவை போன்ற கேள்விகள் பயனற்றவை. சூரியன் பிரகாசிக்கின்றான் ஏன் பிரகாசிக்கின்றான்? என்று அறியத் தேவையில்லை. தாகங் கொண்டவனுக்குக் குளிர்ந்த நீர் கொடுத்தால் அது எங்கிருந்து கொணர்ந்தது என்று சொன்னால் தான் குடிப்பேன் என்பானா? பகவான் சந்நிதியில்

**இந்தப் பிறவியிலேயே தூக்கமும் உணர்ச்சியும் பசியும் கெட்டுவிடுகின்ற தன்மையை அடைந்துவிடவேண்டும். அப்படி அடைந்துவிட்டால் இனியும் பிறவி எடுக்க வேண்டுவது இல்லையாகி விடும்.**

வசிப்பதே இகபர சாதகம். ஆறுதலுக்காகவாவது ஆன்ம உணர்வுக்காகவாவது கண்காட்சிக்காகவாவது வருகிற எவரும் வெறுங்கையோடு திரும்பிப் போவதில்லை என்பது நிச்சயம். அவரவர் சக்திக்கு தக்கபடி அதிகமாகவோ அற்பமாகவோ அருள் பெறுகின்றார்கள். மற்றும் பலருக்குத் தம் வாழ்க்கையையே மாற்றக்கூடிய ஆத்மாநுபவம் கிடைக்கிறது. தெய்விக சக்தியினைக் கண்களில் பிரதிபிம்பிக்கக் காணலாம் என்பது முனிவர்களிடத்தில் முற்றும் உண்மை.

**ஆசிரம தினக்கிரமம்**

சூரிய உதயத்துக்கு முன்பே ஆசிரமத்தின் வேலை ஆரம்பமாகிறது. வைகறையில் நாலு மணிக்குள்ளாக மகரிஷிகளும் ஆசிரம வாசிகள் யாவரும் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு மண்டபத்தில் கூடித் தியானத்திலோ பக்திப்பரவசப் பாடல்களின் கானத்திலோ ஈடுபடுவார்கள். தினந்தோறும் காலை 5மணிமுதல் 6மணி வரைக்கும் ஸ்ரீ ரமண பகவான் மீது ஸ்தோத்திரங்களும் உபநிஷத் பாராயணமும் நடைபெறும். பிராத ஸ்நானத்தின் பின் போஜன சாலையில் காபியும் சிற்றுண்டியும் கிடைக்கும். வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்களின் கூட்டமும் இதற்குள் கூடிவிடும். மகரிஷிகள் ஏதாவது வேலை செய்து கொண்டே இருப்பார். சுமார் ஒன்பது மணிக்குத் தினசரிப் பத்திரிகைகளையும் தபால்களையும் படிப்பார். சிலவேளை அச்சுப் பிரதிகளைத் திருத்திக் கொண்டு இருப்பார் அல்லது பக்தர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்துக்கொண்டிருப்பார். மற்ற ஆசிரம வாசிகள் அவரவர்க்கு ஏற்பட்டிருக்கும் சமையல், பூஜை, தோட்ட வேலை போன்ற பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருப்பர்.

ஆசிரமத்தில் உள்ள வாயில்லா ஜீவன்களுக்கும் வெளியே காத்திருக்கும் ஏழைகளுக்கும் முதலில் அன்னமிட்ட பின் பதினொரு மணிக்கு மேல் போஜனம் ஆரம்பமாகும். மாலை இரண்டு மணிக்குக் காப்பி அல்லது டீ கொடுக்கப்படும். இதன் பின் பார்க்க வருபவர்களுடைய கூட்டம் ஏராளமானதாக இருக்கும். இதுதான் பொதுவாக கேள்விகள் கேட்கும் சமயம். சரியான மனப்பூர்வமான கேள்விகளுக்கு உடனே பதில் உண்டு. குறும்பு வினாக்களுக்கு பதில் கிடைக்காது. ஒவ்வொரு சமயத்தில் அக்கேள்விகளுக்கும் சரியான பதில்கள் கிடைப்பதும் உண்டு. மகரிஷிகளின் மௌனத்தினாலே பல சந்தேகங்கள் நிவர்த்தியாகிவிடும். சந்தியா காலத்தில் ஆசிரம வேத பாடசாலை மாணவர்கள் சந்நிதியில் ஸ்ரீ ருத்திராதி பாராயணம் செய்தபின் பகவான் அருளிய ஸ்தோத்திர உபதேச பாடங்களையோ பகவான் மீது பக்தர்கள் செய்த ஸ்தோத்திர பாடல்களையோ 7 மணிமுதல் 7. 30 மணிவரைக்கும் பாடுவார்கள். இதன்பின் இரவுச்சாப்பாடு. ஒன்பது மணிக்குப் படுக்கை. இது தான் ஆசிரமத்தின் வாழ்க்கைமுறை.

உ

## நோயற்ற வாழ்வு

கோவிந்தசாமி செயராமன்

***வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்***
***நோக்குண்டாம் மேனிநுடங்காது பூக்கொண்டு***
***துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்***
***தப்பாமல் சார்வார் தமக்கு.***

ஔவைப் பிராட்டியார் அவர்கள் விநாயகனைத் துதித்துப் பாடிய இந்தப் பாடலில் மனித சமுதாயம் நோயின்றி வாழவும் நீண்ட ஆயுளைப் பெறவும் பல மருத்துவக் கருத்துக்களையும் கூறியுள்ளார்கள் என்பது நம்மில் பலருக்குத் தெரியாது.

மருத்துவ ரீதியாக நோக்கினால் இப்பாடலின் கருத்துக்கள்

***வாக்குண்டாம்:*** உடல்வாகு உண்டாகும்
***நல்ல மனமுண்டாம்:*** நல்ல தெளிவான பண்புகளை உடைய மனம் உண்டாகும்.
***மாமலராள்:*** பெருமைக்குரிய தாமரைப்பூ தூதுவெளைப்பூ ஆவாரம் பூ
***நோக்குண்டாம்:*** கண்பார்வை துல்லியமாக அமையும்
**மேனிநுடங்காது:** உடல் தளர்வடையாது
**பூக்கொண்டு :** மேலே கூறிய மலர்களைக் கொண்டு
***துப்பார் திருமேனி:*** எவரும் ஏறெடுத்துப் பார்க்காத குப்பையில் முளைத்திருக்கும் குப்பைமேனி
***தும்பி:*** தும்பைச் செடி
***கையான்:*** கையான் தகரை எனும் கரிசிலாங்கண்ணி
***பாதம்:*** சிறு செறுப்படைச் செடி
***தப்பாமல்:*** தவறாமல்
***சார்வார் தமக்கு:*** இந்த மூலிகைகளின் குறிப்பறிந்து குணம் அளவு அறிந்து கையாள்வோருக்கு நல்ல மனமும் ஆரோக்கியமும் நரை திரை மூப்பு இல்லாத வாழ்வும் உண்டாகும் என்பதே இப்பாடலின் கருத்தாகும். எனவே மனித குலம் குரு அருள் துணையுடன் மருந்துண்டு பல்லாண்டு காலம் நல்வாழ்வு வாழ குருவருளைப் பிரார்த்திக்கிறேன்

(ஆதாரம் ஸ்ரீ ஞான ஜோதி சம்பங்கி எழுதிய ஞான தீபத்திலிருந்து தொகுத்தது)

**உறக்கமும் உணர்வும் பசியும் உடலின் அவஸ்தைகள். இவைகெட உயிர்க்கு விழிப்பு உண்டாகும். உடையவனைக் கண்டு ஒன்றிவிடும். அப்போது பிறப்பு அறும் என்பதாம்.**

# MARKANDAN & CO

## SOLICITORS

**Empowered to Administer Oaths**

**THAMIL HOUSE**
**720 ROMFORD ROAD**
**MANOR PARK**
**LONDON E12 6BT**

## M. MARKANDAN. LLB

* All aspects of immigration matters from appeals to European court of human rights * All types of conveyancing* Litigation * All courts civil/criminal * Landlords/Tenant matters * Matrimonial * Police station advice * All D.S.S and housing benefit matters *Free advice for 15 minutes on the first attendance

**LEGAL AID**

**TEL : 0208 514 8188 FAX : 0208 514 8303**

---

# Rani Fashions

**ஈஸ்ட்காமில் தமிழர்களின் மாபெரும் புடவைக் களஞ்சியம்**

**Specialist in Wedding Sarees, Suites, Children Wears**



எங்களிடம் திருமணத்திற்கான சிறந்த கூறைச் சேலைகள்
காஞ்சிபுரம், அபூர்வா, றங்கோலி, கோலம்
மற்றும் பல ரக சாறிகள் கிளவுஸ் துணிகள், சுடிதார்ஈ
குழந்தைகளுக்கான ஆடைகள்
மற்றும் Imitation Jewelleries Ect.
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளப்படும்

***302 High Street North, Manor Park,***
***London E12 6SA***
***Tel: 0208 472 9970 Mobile: 0958 504 118***

# சிவயோகியும் இஸ்லாமிய சாதுவும்

திருமதி தனபாக்கியம் குலசிங்கம்

***மனிதர்கள் பல மதநம்பிக்கைகளை உடையவர்கள். ஆனால் அவை யாவும் உடல்கள் அனந்தமாயினும் அவற்றில் துடிக்கும் மூச்சு ஒன்றே என்ற பொது மூலத்திலிருந்து தான் உருவானவை. ஒரு மரத்திற்கு ஒரு வேர் இருப்பது போல் சமயங்களுக்கும் வேர் ஒன்று தான். மரம் கிளைகளைக் கொண்டிருப்பதனால் அது வேறுபட்ட வேர் கொண்டதன்று.***

(மகாத்மா காந்தி)

***மனிதனின் மாயைக் காட்சியில் இறைவனின் வேறுபாடுகள் இல்லை. ஏனெனில் எல்லா மதங்களும் மனித குலத்தை உண்மை, அன்பு, இரக்கம், அஹிம்சை, தர்மம் ஆகிய வழிகளில் நிற்குமாறே வேண்டுகின்றன. எல்லா மதங்களும் மனிதனின் இல்லற வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நல்லறங்களையே போதிக்கின்றன. எல்லா மத நூல்களும் வெவ்வேறு பெயர்கள் கொண்டவையாயினும் மேலான பரம்பொருள் ஒன்றின் பெருமையையே பேசுகின்றன. இவ்வாறு எல்லா மதங்களின் இலட்சியமும் முயற்சியும் முடிவும் ஒன்றாக இருக்கையில் மதங்களிடையே வேறுபாடுகளுக்கு இடமில்லாமல் போய்விடுகின்றது. இவ்வொருமைப்பாட்டினை வெவ்வேறு மத வழிபாடுகள் மூலம் அடைவது தான் அவற்றில் உள்ள வேறுபாடு***

**(பகவான்சாயிபாபா)**

சிவ யோகிகள் இவ்வாறு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று கூறிய உண்மையை மனித குலம் காலந்தோறும் உணர்ந்திருந்தாலும் மதங்கள் வெவ்வேறு கால தேசச் சூழலில் உருவாகியவை, அதனால் சிறு சிறு வேறுபாடுகள் , போட்டி பூசல்கள், பெரும் போர்கள் என்பன இறைவனையிட்டும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் இவற்றிடையேயுள்ள அடிப்படை ஒருமைப்பாடுகளை மதவெறியன் ஒருவன் உணரும் பக்குவம் அடையும் பொழுதே இறைவனையிட்டுச் செய்யப்படுகின்ற போட்டிகளும் சண்டைகளும் வீணானவை என்று உணரத் தலைப்படுகின்றான். ஆனால் யோகியர் எந்த மதத்தவராயினும் எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே என்ற உண்மையை ஆரம்பம் முதல் இறுதிவரை காணும் பாக்கியத்தைப் பெறுகின்றனர். காரைக்கால் அம்மையார் தாம் சமாதியில் கண்டின்புற்ற அனுபவத்தை

***எல்லா உயிர்களிலும் வேறாகி இருந்து அறிபவனும் அவனே***

***உடலும் உயிரும் போல உயிரிற் கலந்து உடனாய் நின்று அறிவிக்கிறவனும் அவனே***

***அன்பர்கள் சமாதியிலிருந்து அறிகிற உண்மைப் பொருளும் அவனே***

***தீ நிலம் ஆகாசம் முதலான பஞ்ச பூதங்களிலும் நிறைந்திருக்கிறவனும் அவனே***

**( அற்புதத்திருவந்தாதி செய்யுள் 20 )**

என்று கூறுவதிலிருந்து உணரலாம்.

இனி ஒரு சிவயோகியும் இஸ்லாமிய சாதுவும் எவ்வாறு வேறுபட்டவராய் சமாதியிலிருந்து அறிகிற உண்மைப்பொருள் ஒன்றே என்பதனை யோக நெறி வழிமுறைகளைத் துணைக்கொண்டு நோக்குதல் ஏற்றதாம். சிவயோகநெறியின் தொடக்கம் கால வரையறையற்றுக் காணப்படுகின்றது. ஏனெனில் கலியுகத்திற்கு முன்னரே (தற்பொழுது கலி 5102ஆம் ஆண்டு நடைபெறுகின்றது) சிவயோக நெறிகள் உலகம் முழுவதும் பரவியிருந்ததென இதிகாச புராண வரலாறுகள் தெரிவிக்கின்றன. இந்திய கண்டத்தில் கலியுக ஆரம்பத்திற்கு முன்பாகச் சதாசிவ குரு மகேஸ்வரன் என்ற சிவயோகி யோக மார்க்கத்தின் குருவாக நேபாளத்தில் இருந்தார் என்றும் தெரிகிறது. கலியுகம் ஆரம்பித்த பின் மீண்டும்

சிவயோக நெறிகளை நகுலீசர் போன்ற யோகிகள் நர்மதா நதிக்கரையோரங்களிலும் விந்திய மலைப் பிரதேசங்களிலும் வாழ்ந்து நெறிப்படுத்தினார்கள் என்றும் அறிய முடிகின்றது. **(சுவாமி கெங்காதரானந்தா ஞான மண்டலம் 1984 தாளையன் அச்சகம் கொழும்பு 12)** இத்தகவல்களை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் சிந்துவெளி நாகரிகப் பிரதேச அகழ்வாராய்வுகளில் கிடைக்கப்பெற்ற இரு முத்திரைகள் அமைந்துள்ளன. முதலாவது முத்திரையில் திரிசூலத்தை நிகர்த்த தலை அணியுடன் பத்மாசனத்தில் யோக நிலையில் இருக்கின்ற யோகி சிவனே எனப் பிறசான்றுகளுடன் அடையாளம் காணப்பட் டுள்ளது. இரு மருங்கிலும் மண்டியிட்டு வழிபடுகின்ற இரு மனிதரையும் இரு நாகங்களையும் சித்திரிப்பதாகக் காணப்படுகின்றது. இத்தகைய சான்றுகளைக் கொண்டு கி. மு. 3000 அளவிலே சிவயோகம் ஒரு ஆன்மிக சாதனமாக உருவாகியிருந்தது என்பது உறு தியாகின்றது. மனுக்குலத்தை ஆன்மீக வழி நெறிப்படுத்த சிவனால் அருளப்பட்ட யோக நூல் தாந்திரயோகம் என்றும் யோகியர் கூறுவர். இனி எம் அறிவுக்கு எட்டியவரை இக்காலம் முதலாக (கி மு 3000)வடக்கே ஹிமாலயம் முதலாக தெற்கே சிவபூமியான ஈழம் வரையுள்ள புனித பூமிகளில் முனிவர்கள் (சைவம் பாசுபதம் சாக்தம் மாவிரதர் காபாலிகர் வாமதேவம் காலாமுகர் முதலான பிரிவினர்) யோகிகள் நவகோடி சித்தர்கள் என்போர் இறைவனைத் தம்முள்ளே கண்டு ஐக்கியம் அடைந்திருந்தனர் என்பது முனிவர் யோகியர் வரலாறாகும். இவ் யோகியருள் பதினெண் மகாசித்தர்கள் என்போர் சொரூப சமாதி நிலையில் நித்தம் தவம் புரிந்து வருவதனாலே மனித குலம் கலியுக அழிவுகளில் இருந்து காக்கப்பட்டு வருகின்றது என்பர் ஞானிகள்.

இனி யோகம் என்பது இரண்டறக்கலத்தல் எனப்பொருள் படும். அதாவது யோகப் பயிற்சியினால் மனத்தின் எண்ண அலைகள் அற்றுப்போகும் நிலையில் மனிதனுக்குள்ளே உறைகின்ற பரம்பொருளை மனிதன் தனக்குள்ளே தரிசித்து சிவமாக்கிச் சிவபோகம் அனுபவித்திருக்கையில் உயிர் தன்னைச் சிவத்தின் வேறாகப் பிரித்தறிவதில்லை. உயிரின் இந்நிலையை அவனே தானேயாகிய முத்தி என வேத சிவாகமங்கள் கூறுகின்றன. இவ்வாறு தான் வேறு சிவம் வேறு எனப்பிரித்தறியாது இரண்டறக் கலந்திருக்கையில் அப் பேரின்பத்தைக் கொடுத்தருளுவது சிவமாம். இந்நிலையில் சீவாத்மா சீவாத்மாவாக இருப்பதில்லை. பரமாத்மாவுடன் சீவாத்மா ஐக்கியமாகி விடுகின்ற நிலை கூடியவர்களே யோகியர் ஆவார். திருமூலர் தம் யோக அனுபவத்தைக் கூறும்பொழுது

***உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்***
***உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்***

என்றும் சிவன் கழலைத் தம்முள்ளே காணும் யோகியரைச் சிவனும் சேர்வார் தானாகச் செய்வான் என்றும் கூறுவர். (திருமந்திரம் 5ம் தந்திரம் செய் 1457– 1466) இந்த யோகமும் ***அவனருளாலே அவன் தாள் வணங்கி*** என மணிவாசகர் உணர்த்துவது போலப் பக்குவ நிலையில் இறையருள் வீழ்ச்சியுடையவர்க்கே கைவரக் கூடியது. ஆன்மிகப் பாதையில் மிகவும் கரடு முரடான இப்பாதையை மனிதன் இலகுவில் அடைந்துவிட முடியாது. ஒரு சிவ யோகியின் ஆரம்ப வாழ்வானது கண்ணிற் காண்பன வெல்லாம் அவனேயாகிக் காண்பர். இதனைக் கண்ண பரமாத்மா கீதையில் உண்மை யோகி என்னை எல்லா உயிர்களிலும் காண்கின்றான் . உண்மையில் தன் உணர்வு உடையவன் என்னை எங்கும் காண்கின்றான். என்று கூறுவதிலிருந்து உணரலாம். தன்னை உணர்வது என்றால் பரம்பொருளுடன் தனக்குள்ள உற வினை உணர்வதாகும். இதன் முதற்கட்டமாக ஒரு யோகியின் மனத்திற்கும் உடலுக்குமிடையே வலுவான போராட்டம் நிகழ்வது இயல்பாம். இப் போராட்டத்தில் வெற்றி காண்பவனே நானும் அவனும் ஒன்று என்ற உண்மையை உணர்கின்றவனாகின்றான். தாயுமானவர் நான் அவனாய் நிற்பதெந்த நாள் என்று ஏங்கியிருந்த

**நிறங்கள் உணர்வுகளைத் தூண்டுவன. இவற்றிலேயும் மனம் செல்லாதிருக்க நின் உருவத்தையும் மாற்றி இருப்பாயாக. எல்லாமே சிவம் என்பதே இது.**

நிலையும் இதனையே குறியாகக் கொண்டதாகும். சிவயோக சுவாமிகளும் அவனே நானே தானொன்றாய் போகும் என்று தன் சிவயோக அனுபவங்களை உணர்த்தியிருந்தார். இந் நிலைக்கு ஒருவர் செல்ல வேண்டுமானால் உடல் மனப்பயிற்சிகள் அவசியமாகின்றன. இப்பயிற்சிகள் பற்றி அறிவுறுத்த சிவனால் அருளப்பட்ட யோகநூல் தாந்திர யோகமாகும். இது தவிர யோகப்பிற்சிகளில் வெற்றி கொண்ட அகஸ்திய முனிவர் போக நாதர் பதஞ்சலிமுனிவர் கொங்கணவர் மச்ச முனி கோரக்க நாதர் ராம தேவர் இடைக்காடர் பாம்பாட்டி வால்மீகிமுனிவர் முதலான பதினெண் சித்தர் நூல்களும் உள.

பதஞ்சலி முனிவர் யோகப்பயிற்சிகளை எட்டு அங்கங்களாகப் பிரித்து விளக்கியுள்ளார். அவை இயமம், நியமம் ஆசனம், பிராணாயாமம் பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும். மனிதனுக்கு உடல் உள்ளம் உயிர் என்ற மூன்று நிலைகள் உண்டு. யோகப்பயிற்சிகள் இம் மூன்றுடனும் தொடர்பு டையனவாய் அமைகின்றன. காண்பதெல்லாம் அப் பரம்பொருளே என்ற எண்ணம் ஒரு சாதக னிடத்தில் தலையெடுத்திருக்கும் நிலையில் அவன் எல்லா உயிகளிலும் அன்புடையவனாகின்றான். அன்பே சிவம் என அனுபவவாயிலாகவும் உணர்கின்றான். இப் பக்குவம் மீதூரப்பெற்ற சாதகன் தன் உடலைச் சாத்விக உணர்வுகள் மூலம் தயார்படுத்தத் தொடங்குகின்றான். இவ்விதமே மனதையும் பிராணாயாமம் பிரத்தியாகாரம், தாரணை, சமாதி என்பன மூலம் இயக்கம் அற்றுப்போகும் நிலைக்குப் பயிற்சி செய்கின்றான்.

இனி மனிதனின் உள்ளம் உயிர் இரண்டினையும் நுண்ணுடல் என்பர். இந் நுண்ணுடலில் ஏழு சக்கரங்களும் (மூலாதாரம் சுவாதிஸ்டானம் மணிபூரகம் அநாஹதம் விசுதம் அக்ஞும் சகஸ்ராகாரம்) மூன்று வகை நாடிகளும் (சுழுமுனை இடநாடி பிங்கலைநாடி) உள மூலாதாரச் சக்கரமாகிய குதத்தினுள் உறங்கும் நிலையிலிருக்கும் குண்டலினி என்னும் தெய்வீக சக்தி சுழுமுனை நாடிவழியாக ஆறு சக்கரங்களையம் தாண்டி உச்சியிலிருக்கின்ற சகஸ்ராரத்தை (ஆயிரம் இதழ்களை உடைய தாமரை வடிவிலுள்ள சக்கரத்தை) அடையுமாயின் இதுவே சிவயோகிகள் தெய்வமாகும் நிலையாகும். சகஸ்ராரத்திலேதான் ஞானமயமான சிவம் உறைகின்றது. ஒரு சிவயோகி குண்டலினி சக்தியை உச்சியிலிருக்கும் ஞானக்கதவின் வாசலில் ஏற்றி நிறுத்தினால் ஞானக்கதவானது அவனுக்குத் திறக்கப்படுகின்றது. அப்பொழுது உள்மனம் பிரகாசித்து சமாதி நிலையடைய உயிர் சிவத்துடன் ஐக்கியப்ப டுகின்றது. இவ்வாறு சிவயோகிகள் யோக சாதனைகளால் தம் சுவாசக் காற்றுக்களைச் சமமாக ஓடப்பண்ணியும் கட்டுப்படுத்தியும் பயின்று கொண்டு இறுதியில் சிவத்தின் மூச்சையே தமதாக்கிக்கொண்டு செரூபசமாதியில் நிலைக் கின்றார்கள். இப்பேற்றினை அடைந்தவர்களே சிவயோகியர் எனப்படுவர்.

திருச்சிற்றம்பலம்

A landlord may be very rich, but when a poor tenant brings a humble present to him with a loving heart, he accepts it with the greatest pleasure. So the Almighty God, though so great and powerful, accepts the humble offerings of a sincere heart with the greatest pleasure and satisfaction.

***-Sri Ramakrishna-***

**வீடு என்பது ஆன்மாவின் இறுதி நிலை. எல்லா ஆன்மாக்களும் இதை அடைந்தேயாகவேண்டும். தெளிவு பெற்ற ஆன்மாக்கள் முந்திப் பெறுகின்றன. தெளிவு குன்றியவை பிந்திப் பெறுகின்றன.**

# தெரிந்த விடயங்களும் தெரியாத விபரங்களும்

**–கோவிந்தசாமி செயராமன்(பாரிஸ்) –**

## ஔவையார்

ஔவையார்கள் வாழ்ந்த காலங்களும் பல ஔவையார்கள் வாழ்ந்துள்ளார்கள் என்ற சான்றுகளும் தெள்ளத் தெளிவாக உள்ளன. இருப்பினும் இக்கருத்தை ஒரு சிலர் ஏற்றுக் கொள்வதில்லை. தமிழில் தாயை அம்மை என்று வழங்கிய காலம்போக இன்று அம்மா என்று அழைக்கின்றோம். இந்த அம்மையிலிருந்து அவ்வை வந்தது. அவ்வையிலிருந்து திருந்தி ஔவை என்றாகியது. தமிழில் இருந்து பிரிந்த தெலுங்கில் இன்றும் மூதாட்டிகளை அவ்வா (ஔவை) என்று தான் அழைக்கின்றார்கள். ஒரு பொதுப்பெயர் இயற்பெயராகும் போது எழுத்து மாறுவது நன்றே. பெரியோர்களைப் பெயர் சொல்லி அழைக்கும் வழக்கம் அன்று நம்மிடம் இல்லை. ஆதலால் அவர்கள் பாடிய பாட்டுக்கள் எல்லாம் பெயரில்லாமலே ஔவை பாடிய பாட்டு என்றாகி விட்டது. இன்றும் நம் கிராமங்களில் பெரியவர்கள் தங்களின் பேரப்பிள்ளைகளுக்கு நல்ல கருத்துடன் கூடிய பாடல்களைப் பாடி அவர்களை மகிழ்விப்பதைப் பார்க்கலாம்.

கடைக் கழக காலத்திலிருந்து 16ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் ஔவையார் எழுவர்.

1) **கடைக்கழக ஔவையார்**

*(கிபி 2ஆம் நூற்றாண்டு) அதியமானால் தூது போக்கப்பட்டவர்.*

2) **அங்கவை சங்கவை கால ஔவையார்.**

3) **சேரமான் பெருமாள் நாயனார் கால ஔவையார்**

*(கி பி 8ஆம் நூற்றாண்டு)*

4) **கம்பர் கால ஔவையார்** (கிபி 12ஆம் நூற்றாண்டு)

5) **ஆறிவைக் குறள் ஔவையார்**

*(கி பி 14ஆம் நூற்றாண்டு)*

6) **ஆத்தி சூடி ஔவையார்**

*(கி பி 16ஆம் நூற்றாண்டு)*

7) **புந்தனத்தாதி ஔவையார்**

*(கி பி 17ஆம் நூற்றாண்டு)*

8) **ஆறாம் ஔவையார்**

*(16ஆம் நூற்றாண்டு)*

ஆறாம் ஔவையார் இயற்றியவை **ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை** முதலிய நன்னெறிச் சுவடிகள். இவர் பாடிய மூதுரை என்ற பாடல்களில் உள்ள ஒரு வெண்பாவில்

*கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி*
*தானும் அதுவாகப் பாவித்துத்–தானுந்தன்*
*பொல்லாச் சிறகை விரித்தாடினால் போலுமே*
*கல்லாதான் கற்ற கவி.*

வான் கோழி என்று வருகின்றது. இந்த வான் கோழி 16ஆம் நூற்றாண்டில் துருக்கிய நாட்டில் இருந்து இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டது. ஆதலால் அதைப் பாடிய ஔவையார் அறநூல் அதன் வரவிற்குப் பிற்பட்டது என்பது ஒரு சில ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

(ஆதாரம் : தமிழ் இலக்கிய வரலாறு ஆசிரியர் ஞா.தேவநேயன்)



**நிமிடத்துக்குப் 15 மூச்சுகள் வீதம் ஒரு நாளைக்கு 21600 மூச்சுகள் நடக்கப் பழக்கினால் சித்தி பெற்றுச் சித்தர்கள் ஆகலாம்**

# சிறுவர் கலசம்

**வணக்கம்!**

பெற்றார்களே! சிறுவர்களே!

முதலில் உங்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன். சென்ற தடவைக் கலசத்தில் எம்மையும் மீறி ஆங்கிலக் கட்டுரையில் தவறுகள் புகுந்துள்ளன. இதனை எமக்குச் சுட்டிக்காட்டிய பெரியவர்களுக்கு மனமுவந்த நன்றிகள். இம்முறை மிக அவதானமாக எழுத்துக்களை ஒப்பு நோக்கியுள்ளோம். உங்களின் ஆக்கங்களையும் அபிப்பிராயங்களையும் எங்களுக்கு எழுதுங்கள் .

–கலசம் மாமா–

## நல்வினை தீவினைகள்

கடவுள் எல்லா உயிர்களுக்கும் பரமபிதா. ஆதலால் மற்றைய உயிர்கள் யாவும் நமக்குச் சகோதரர்கள். நமது அன்புக்கும் ஆதரவுக்கும் உரிமையுடையவர்கள். நாம் இதை முற்றாக மறந்து, சிலரை வெறுக்கின்றோம். வேறு சிலரைப் பகைக்கின்றோம். சில உயிர்களுக்குத் துன்பம் செய்கின்றோம். சிலவற்றைக் கெடுக்கின்றோம். இப்படி முறை கேடாய் நாம் நடப்பதற்குக் காரணம் நமது ஆசைகள். ஆசைகள் உண்டாவதற்குக் காரணமாயுள்ளது நம்மை மயக்கிக் கொண்டிருக்கும் ஆணவம்.

ஆசைகளை நாம் எல்லைப்படுத்தி வைப்போமாயின் மற்றைய உயிர்களைச் சகோதரர்களாகப் பாவித்தல் இலகுவாய்க் கை கூடும். நமக்குப் பொருளிலே ஆசை உண்டு. இந்த ஆசைக்கு எல்லையாய் இருக்கவேண்டியது நாம் நன்முயற்சியால் சம்பாதிக்கும் பொருளேயாம். அந்த எல்லையைக் கடந்து பிறர் பொருளிலே இந்த ஆசை செல்லுதல் தகாது. நமக்கு உணவிலே ஆசை உண்டு. இந்த ஆசைக்கு எல்லையாய் இருக்கவேண்டியவை பிற உயிர்களை வருத்தாமல் வரும் உணவுகளாம். அவையாவன அரிசி முதலிய தானியங்களும், காய், கனி, கிழங்கு முதலியவைகளுமாம். இந்த ஆசையானது மீன், விலங்கு முதலியவற்றின் ஊனிலும் இவற்றுட் சிலவற்றின் கருவாயுள்ள முட்டைகளிலும் செல்லலாகாது. நம்முடைய கலவி ஆசை விவாக எல்லையுள் அடங்கி நிற்க வேண்டியது. அப்பாற் செல்லுதல் தகாது.

ஆசையானது எல்லையைக் கடக்கும்போது நாம் செய்யும் செயல் தீவினையாகும். தீவினை செய்பவர்களுக்குக் கடவுள் இப்பிறவியிலேனும் மறுபிறவியிலேனும் துன்பமான வாழ்க்கையைக் கொடுத்தருளுவார். இப்பிறவியிலே குருடாய், செவிடாய், நொண்டியாய்ப் பிறக்கின்றவர்களும் பிறந்த பின்பு வறுமையாலும் நோயாலும் அறிவின்மையாலும் வருந்துகின்றவர்களும் முற்பிறவியிலே தீவினை செய்தவர்களாம். பிற உயிர்களில் இரக்கமும் அறப்பற்றும் யாவரும் கடவுளுடைய குழந்தைகள் என்ற எண்ணமும் உறுதிப்பட்டால் ஆசைகள் தாமாகவே அடங்கி நிற்கும். அப்படி அடங்கி நின்றால் நாங்கள் தீவினைகள் செய்ய மாட்டோம்.

நல்லவர்களுடைய சரித்திரங்களைப் படித்தலும் கேட்டலும் அவர்களை நயத்தலும் தாய் தந்தை ஆசிரியர் முதலியோருக்குப் பணிந்து நடத்தலும் அவர்களுடைய அன்பை விரும்புதலும் தீவினை செய்யாமைக்குத் துணையானவைகளாகும். எங்கும் நிறைந்திருப்பவரும் எல்லாம் அறிபவரும் நமது நெஞ்சிலே எப்போதும் வீற்றிருப்பவரும் ஆகிய சிவபெருமானை வணங்கி நிற்றலே தீவினைகளிலிருந்து நீங்குதற்கு வழிகளாம்.

தீவினை செய்பவர்களுக் கடவுள் துன்பத்தை ஊட்டியருளுவார். அத் துன்பத்தினாலே அவர்களுக்குத் தீவினையில் வெறுப்பும் நல்வினையிலே விருப்பும் உண்டாகும். அதனால் ஆணவ மறைப்புக் குறையும் மெய்யறிவு வளரும்.

**–க. சிவபாதசுந்தரம்–**

## SARASVATHY

=KUMAR PUNITHAVEL-

As the creative aspect of Sakthi the first aspect of interest is the white sari that she adorns. Normally in our culture it is customary for widowed women only to wear white. In Saraswathi's case the white sari serves to demonstrate the pre-creation state of colour. She is usually depicted as being seated on a white lotus. The lotus flower represents blossoming.



In this case it represents the energy of creation that has not yet begun. It is about to begin, as such there are no colours and so it is white. She has a veena in one hand. The veena represents the sound AUM(natham) when the cosmic energy begins to whirl and act. It should be noted that Saraswathy is believed to use a swan or Annam as a vehicle. The Annam also stands for act of breathing. Inhaling(soham) and exhaling(soham) the two components of breathing together form the movement of the life force. Thus it can be seen that Saraswathy riding on an Annam vahana symbolises cosmic energy, manifesting itself, as Sakthi in control of our lives.

## MAHALUXMI

Mahaluxmi is the consort of Vishnu and the protective aspect of Sakthi.She is always depicted as wearing a red sari and sitting on a red lotus flower. The colour red is the colour of blood and it signifies life. Thus the protective aspect of Sakthi is given this colour. Without wealth life in this world is a sad struggle and thus wealth is considered to be an important aspect of life.Luxmi is said to have 'Swarna hasta' , which means that she has golden hands. In a typical image of Luxmi she is shown with gold coins pouring from her hand. Wherever Luxmi is wealth exists there. Without wealth one cannot even perform the humblest charity. For a happy fulfiling life a person requires eight things, such as



'santhanam'(Children), 'dhanam' (Money), 'dhaniyam' (Food) .

Hence our forefathers gave us eight different forms of Luxmi to worship.For instance people with all the wealth in world will still be unhappy if they could not have children. As a result these persons could go and worship

' Santhana Luxmi' asking for children.

Mahaluxmi is shown as being seated on red flower. The reason for the lotus is different. It signifies that the Goddess is well rooted in the supreme reality. She holds a lotus flower in another hand , signifying the supreme reality.

# DURGA


The consort of Rudra is Durga. She is the destructive aspect of Sakthi. The word Druga literally means one who is hard to approach. As the aspect of Sakthi responsible for destruction, she is usually represented with a stern expression. She is dark in colour and is shown with a black sari. Science proves that the colour black has the capability to absorb all colours and not emit them back.Thus Durga's black to show that she is the aspect of Sakthi who resolve or re absorbs.As a result Durga is both beautiful and fearsome. She can be depicted with four, eight,ten,or twenty arms; each arm usually brandished an impressive carry of weapons. Being the destructive element of Sakthi it is acceptable for her to carry all these weapons. The goddess Kali is said to come forth from the forehead of Durga. If Durga represent the fierce aspect of sakthi,then Kali represents the terrible aspect. Kali is represented with black skin and a hideous countenance. She is said to drip with blood. She is covered in snakes. She wears a garland of human skulls and is more representative of fury than of a goddess. There are many explanations for her appearance. Her black colour refers to her ultimate nature (to resolve or absorb). The colour black absorbs all colours and emits none. Thus the destructive aspect of Sakthi is given this colour. She is often shown dancing on cremation grounds, where all beings eventually end up. The necklace of severed heads is the Universe of names and forms that she as the destructive aspect has destroyed. As the name Kali suggests she is the destroyer of time. Kali represents life with all its dangers, bloodshed, suffering, fierce competition and inevitable destruction.








# சிறுமி வரைந்த சித்திரம்



செல்வி அருந்ததி சுந்தரதாசன்


SHIVA PARVATI
SHIVA'S FATHER-IN-LAW, DAKSHA, FOR SOME REASON DISLIKED HIM AND NEVER LOST AN OPPORTUNITY TO INSULT HIM. SATI, SHIVA'S WIFE, ASHAMED OF BEING THE DAUGHTER OF SUCH A FATHER, GAVE UP HER BODY. AFTER SATI'S DEATH, SHIVA WENT BACK TO HIS MEDITATION ON THE HIMALAYAS.


VERY NEAR THE GROVE WHERE SHIVA MEDITATED, LIVED THE GREAT MOUNTAIN KING, HIMAVAT.
HE HAD MARRIED THE HEAVENLY NYMPH MENAKA.
THEY WERE LOVED DEARLY BY ALL.
ONE DAY –
MENAKA HAS HAD A BABY GIRL! A LOVELY CHILD!
LET US CALL HER PARVATI.


NATURE TOO REJOICED AT PARVATI'S BIRTH.
WHAT A BEAUTIFUL CHILD SHE IS!
HUSH! DO NOT PROVOKE THE EVIL SPIRITS.
PARVATI WAS REALLY SATI WHO HAD BEEN REBORN, BUT THIS TIME TO A FATHER SHE COULD BE PROUD OF AND WHO WAS PROUD OF HER.
SHE WAS AS LIVELY AS SHE WAS LOVELY AND HAD MANY FRIENDS.
PARVATI! CATCH HA! HA! YOU MISSED AGAIN.
I HAVE HAD ENOUGH OF THIS GAME. COME LET US GO HOME AND PLAY WITH OUR DOLLS.




-will be continued in the next iss

# தாய் மண்ணில் ஓர் ஆலயம்

நூற்றாண்டு பழமை வாய்ந்த துன்னாலை புளிங்கான் ஸ்ரீ சிதம்பர விநாயகர் தேவஸ்தான பாலஸ்தாபன விழா!

புதிய நூற்றாண்டாய் மலர்ந்திருக்கும் மிலெனியம் 2000 ம் கொண்ட சரித்திரத்திலே எமது புது வருஷம் என நாம் போற்றும் விக்ரம வருஷ நாமத்திலே நாமகளின் பூரண அருளோடு ஆன்மிக இதழ்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாய் திகழ்ந்து.நிறை குடமாய், மிளிர்ந்து காலாண்டு இதழாய் கனிவோடு விளையும் 32 ஆவது கலசம் இதழுக்கு முதற்கண் எமது மனமார்ந்த வாழ்த்துக்களும் ஆசிரிய, நிர்வாக, குழாத்திற்கு மனமுவந்த பாராட்டுக்களும் தெரிவித்து எமது கட்டுரைக்குள் நுழைகின்றோம்.

இலண்டனிலே பரந்து வாழும் எம் தமிழ் மக்களுக்கும் ஏனைய நாட்டின் தமிழ் மக்களுக்கும், உலகின் அனைத்து பாகங்களின் சமய சமூக, பரிமாண வளர்ச்சி, மற்றும் எம் தாயக மண்ணில் தற்போதய போர்ச் சூழலிலும் ஆலயத் தொண்டுகள் வழிபாடுகள், என்பவற்றிற்கு எம்மவர்கள் கொடுக்கும் முக்கியத்துவம், அத்தோடு அந்த ஊர் மக்களின் ஆலயச் செய்திகளால் தங்கள் ஊர் ஆலய நிகழ்வுகளை, மனக்கண்ணில் நினைந்து போற்றவும், திருப்பணி நிதி கொடுப்பனவுகள் அளிக்கவும் கலசம் ஒரு பாலமாக பெரும்பணி புரிகின்றது என்பதில் மகிழ்ச்சி.

அண்மையில் கலசம் (ஆடி. ஆவணி, புரட்டாதி 1999) இதழில் வெளியான கரவெட்டி யாக்கரு சித்திவிநாயகர் கும்பாபிஷேக விழா கட்டுரை வெளிவந்ததில் இலண்டனில் இருந்து அவ்வூர் அடியார்களால் திருப்பணி நிதியாய் கொடுப்பனவுகள் அனுப்பப்பட்டது என ஆலய நிர்வாகத்தினர் மூலம் அறிய முடிந்ததை கலசம் இதழ், ஆசிரியர் நிருவாக குழுவிற்கு அறியத்தருவதில் எமக்கும் மகிழ்ச்சி. இனி விடயத்திற்கு வருவோம்.

யாழ் வடமராட்சியின் சரித்திர பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அமைந்த துன்னாலை எனும் பெரும் பதியின் கண்ணே ஆங்காங்கே அவ்வூரின் எழிற் கோலங்களாய் ஆலய கோபுரங்கள், தடாகங்கள், தாமரைக் குளங்கள், யாத்திரிகர் மடங்கள், என அழகு நிறை வளங்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவ்வூரின் மிக மிக தொன்மையும் பழமையும் வாய்ந்த ஆலயமாய் போற்றப்படுவது புளியங்கான் பிள்ளையார் என அவ்வூர் மக்களால் அழைக்கப்படும் சிதம்பர விநாயகர் ஆலயம். பல காலமாய் ஒரு காலப் பூசையோடு மட்டும் கவனிப்பின்றி இருந்தது. இவ்வாலயத்திற்கு அருகாமையிலேயே வெல்லிக் கந்தோட்டம் விநாயகர், வல்லியானந்த பிள்ளையார் என இரு ஆலயங்கள் மூன்றுகாலப் பூசையோடு நித்திய நைமித்திகங்கள் சிறப்பாய் நடைபெற்று வந்தமையால், இந்த ஆதி மூர்த்தியான புளியங்கான் விநாயகர் சரியான நிர்வாகம் இன்றி கவனிப்பாரற்று இருந்தது. இஃது அவ்வூர் மக்களுக்கு பெரும் குறையாக இருந்தது. அது மட்டுமன்றி ஆலயம் சூழ்ந்த பகுதி வாழ்மக்கள் அடிக்கடி பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியும் இருந்தது.

இதன் காரணமாய் அவ்வூர் ஆன்றோரின் அறிவுரையாலும், இளைஞர்களின் ஊக்கத்தாலும், தனவந்தர்களின் நிதி உதவிகளாலும் ஆலயத்தின் புனருத்தாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் முதற்கட்டமாய் ஆலய பாலஸ்தாபன வைபவம் அண்மையில் அடியார்கள் சூழப் பக்திமயமான சூழலில் அதிகாலை கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு ஸ்ரீ சிதம்பர விநாயகர் பால ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பாலஸ்தாபன கும்பாபிஷேக விழா இனிதே நடைபெற்றது.


தொடர்ந்து ஆலயம் முற்று முழுதாக இடிக்கப்பட்டுப் பழமை வாய்ந்த கட்டிடங்கள் முற்றாக அகற்றப்பட்டு அதே ஸ்தானத்தில் நூதன ஆலயமாய் மிக அழகாகக் கட்டப்பட்டு ஆலயத்தின் அரைவாசி திருப்பணி வேலைகள் நிறைவாகி தொடர்ந்து முற்றான பணிகள் மேற்கொள்ளப்பட்டு

**எல்லாவிதமான தீவினைகளையும் விலக்குவது சைவசமயம் மாத்திரமே. ஏனைய தீவினைகளோடு கள்ளுண்ணல், புலாலுண்ணல், கொலையாகிய மூன்றையும் விலக்குவது சைவ சமயமே.**

வருகின்றது. புளியங்கான் ஸ்ரீ சிதம்பர விநாயகருக்குத் தனவந்தர்களின் நன்கொடைகளும் இளைஞர்களின் சிரமதானப் பணியும் பக்க பலமாய் உள்ளன.

பெரும் சாந்தி எனப்படும் மஹாகும்பாபிஷேக விழாவைக்காண அவ்வூர் மக்கள் ஆர்வத்தோடு செயல் புரிகின்றனர். பிரணவப் பொருளாய், முதற்தெய்வமாய் விளங்கும் ஸ்ரீ சிதம்பர விநாயகர் விக்கினங்களை நீக்கி பரிபூரணமாய் அருள நாமும் பிரார்த்திப்போமாக.

***துன்னையூர்***
***ராம். லோகேஸ்வரக் குருக்கள்.***






SHIPPING - AIR FREIGHT - TRAVEL

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.

TO **COLOMBO** AND OTHER WORLD WIDE DESTINATIONS

**MAIN AGENT FOR SRILANKAN AIRLINES**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME**

**ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

SriLankan **14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ** SriLankan

**GLEN CARRIERS LIMITED**

**Tel: 0208 740 8379/ 0208 749 0595**
**Fax: 0208 740 4229**
**BONDED WARE HOUSE**
**LAKSIRISEVA , 66 NEW NUGE RD, PELIYAGODA**
**TEL: 575576**

KUMARANS

# குமரன்ஸ்

*Imports & Exports*

உங்களுக்கு அன்றாடம்
தேவையான லீலா தயாரிப்பு
பொருட்களை மொத்த விற்பனை
விலைக்கு தொகையாக வாங்கி
சிக்கனமடையுங்கள்

Imports & Exports

FREE PARKING AVAILABLE
FOR OUR CUSTOMERS

**KUMARANS LIMITED**
142-144 HOESTREET
WALTHAMSTOW, LONDON E17 4QR
TEL
020 8530 3033
020 8521 4955
020 8521 4411

FAX
020 8530 5655
020 8521 9482

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

KUMARANS

# பெயரில் என்ன இருக்கிறது?

வ. வேம்பையன்
அமைப்பாளர் தமிழ்க்கலை அறிவியல் மன்றம்,
பகுத்தறிவாளர் கழகம், கல்பாக்கம்.

மனிதர்களை விலங்குகளில் இருந்து வேறுபடுத் திக்காட்டுவது மொழியே ஆகும்.

ஓர் இனத்தின் தனித்தன்மைக்குத் தக்க சான்றாக விளங்குவதும் அந்த இனத்தின் மொழிதான். என்பது வெளிப்படை. இன, மொழி, நாட்டு வரலாற்றைப் போற்றிப் பேணிப் பாதுகாத்து வருங்காலச் சமுதாயத்துக்கு வழங்குவது தாய்மொழி எனில் மிகையாகாது.

தாய் தன் குழந்தைக்கு முதன் முதலில் சொல்லித் தரும் சொந்த மொழியே தாய் மொழியாகும்.

தமிழர்களாகிய நம்முடைய தாய் மொழி தமிழே.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தமிழ் நூல்களைப் படித்துப் பார்த்தால் ஆள்பெயர், இல்லப்பெயர், தெருப்பெயர், ஊர்ப்பெயர் கடைப்பெயர், முதலியவற்றில் சாதி, சமயம், கடவுள் சார்பு இல்லாமல் மொழிவழிப் பொதுப்பெயராக இருந்ததை நாம் உணர முடிகிறது.

இவ்விதம் மொழிவழிப் பொதுமை போற்றி வாழ்ந்த தமிழர் சமுதாயத்தில் ஆரியர், அந்நியர், அயலவர், வருகையாலும் அவர் தம் ஆட்சியாலும் தமிழர் முன்னேற்றத்திற்கு தீமை தரும் கருத்துக்களும் பழக்க வழக்கங்களும், நடைமுறைகளும் புகுத்தப்பட்டன.

அவற்றில் ஒன்று தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழில் பெயரிடாமல் அயல் மொழிகளில் பெயர் சூட்டுவதாகும்.

ஓர் இனத்தைப் பிறிதோர் இனத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டவே வெள்ளை இனம், கறுப்பினம், மஞ்சள் இனம் என்று நாம் அழைக்கின்றோம். அதுபோலவே ஒருவரை பிறிதொருவரிடமிருந்து வேறுபடுத்தி அழைப்ப தற்குப் பெயர் இன்றியமையாத ஒன்றாகும். ஒரு சமுதாயத்தில் ஓர் ஆளைத் தனியாகக் குறிப்பிடு வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லோ சொற்களின் தொகுப்போ பெயர் எனப்படும்.

அந்தப்பெயர் அந்த இனத்தின் மொழி மரபை ஒட்டி இருத்தல் வேண்டும். இவ்விதம் மொழிவழி மரபைப் பேணுவதற்காகவே பிரான்சு, செர்மனி, நாடுகளில் அந்த நாட்டு அரசுகள் சட்டம் இயற்றியுள்ளனர். அரசு தயாரித்து வெளியிட்டுள்ள பெயர்ப்பட்டியலில் இருந்து ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்தே சூட்டவேண்டும். தம் விருப்பம் போல் பெயர்சூட்ட முடியாது.

பிரான்சு, செர்மனி, டென்மார்க் நாடுகளில் உள்ளது போன்ற சட்டங்கள் இங்கு இல்லாமையாலும் ஓர் இனத்தை அழிக்க அந்த இனத்தின் மொழியை அழிக்க வேண்டும், இயலவில்லையானால் அம்மொழியைச் சிதைக்கவேண்டும், எனும் இலக்கணப்படியும் அயல், அந்நிய அரசுகள் நமது நாட்டில் ஆள்பெயர், இல்லப்பெயர், ஊர்ப்பெயர், தெருப்பெயர் கடவுள் பெயர் முதலியவற்றை அயல் மொழிகளில் மாற்றி வைத்து விட்டன.

***மொழி இல்லாத சுதந்திரம் வேண்டுமா? சுதந்திரம் இல்லாத மொழிவேண்டுமா? என்று கேட்டால் பின்னதையே நான் தேர்ந்தெடுப்பேன் என்று ஐரிசு நாட்டு விடுதலை வீரர் ஏமண்டிவேலரா கூறியுள்ளதை எண்ணிப் பார்ப்பதும் ஏற்றம் பெற ஏதுவாகும்.***

இவற்றின் தீமைகளை நன்கு உணர்ந்து தெளிந்த தமிழ் இனத்தலைவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள், தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு காக்கத் தமிழ்ப் பெயர் சூட்டுவதை ஓர் இயக்கமாகவும் கொள்கையாகவும் கொண்டு பாடுபட்டார்கள்.

தன்மான இயக்கத் தந்தை பெரியாரும் தனித் தமிழ் இயக்கத்தந்தை மறை மலை அடிகளாரும் தலைமை ஏற்று எங்கும் பரப்பி வந்தார்கள். அதன்

**ஆன்மாக்கள் ஆணவமென்னும் வியாதியினாற் பீடிக்கப்பட்ட நோயாளிகள் என்றும் அவைகள் செய்யும் பிழைகள் யாவும் அந்த நோயினால் வருவன என்றும் சைவ சமயம் கூறும்.**

விளைவு தான் கீழ்க் குறிப்பிட்ட தனித் தமிழ்ப் பெயர் மாற்றம் என்பதை உணர்ந்தால் உயர்வுண்டு

சுவாமி வேதாசலம் –மறைமலை அடிகள்
சூரியநாராயண சாஸ்திரிகள்–பரிதிமால் கலைஞர்
நாராயணசாமி– நெடுஞ்செழியன்
இராமையா– அன்பழகன்
சோமசுந்தரம்– மதியழகன்
தண்டபாணி– இளம்வழுதி
நடராசன்–செங்குட்டுவன்
முத்தையன்– அறிவழகன்
நவநீதகிருட்டிணன்–பொன்னிவழவன்
சாரங்கபாணி–வீரமணி
பால சுந்தரம்–இளவழகன்

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழ்க்கடல் மறைமலை அடிகள், தமிழ்ஞாயிறு பாவாணர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதலிய தமிழ் இனத்தலைவர்கள் சான்றோர்கள், அறிஞர்கள், புலவர்கள் மேற்கொண்ட எழுத்து, பேச்சு, இயக்கம் ஆகியவற்றால் தமிழ்ப்பெயர்கள் தமிழர் இல்லங்களில் வாழ்வும் வளமும் பெற்றன.

என்றாலும், இப்பொழுது தமிழ்ப் பெயர் சூட்டுவதில் தயக்கமும் மயக்கமும் ஏற்பட்டு வடமொழி, ஆங்கிலப் பெயர்கள் ஆதிக்கம் செய்யத் தொடங்கியுள்ளன. தமிழ் மொழி உணர்வும் இன உணர்வுமே தமிழர்க்கு வாழ்வும், வளமும் ,நலமும், வலிவும், ஆக்கமும், அரணும், ஊக்கமும், உயர்வும், பெருமையும், புகழும், தரவல்லன என்பதைத் தமிழர்கள் உணர்ந்து தெளிதல் வேண்டும்.

சாதி, சமயம், கட்சி, அரசியல் ஆகியவற்றால் பிணக்கும் பிரிவும் பேதமும் பிளவும் பகையும் கொண்டு உலகில் 77 நாடுகளில் வாழ்கின்ற 15 கோடித்தமிழ் இன மக்களை ஒன்று சேர்க்கிற, ஒற்றுமைப்படுத்துகிற கூறுகளைப் போற்றிப் பின்பற்றிப் பரப்பினால் தான் தமிழும், தமிழரும் தமிழ்நாடும் உலகில் தலை நிமிர்ந்து வாழ முடியும். ஆனால் இன்று பெயரில் என்ன இருக்கிறது? என்று கேட்கிற ஒரே இனம் உலகில் தமிழ் இனமாகத்தான் இருக்கும். காரணம் என்ன? தமிழர்கள் ஒரு துறையில் மட்டும் அடிமை இல்லை. வாழ்வியலுக்கு இன்றியமையாத பல துறைகளிலும் பல நூற்றாண்டுகள் அடிமையாக இருந்து வருவதும் அயல், அந்நிய ஆட்சிகளின் வல்லாண்மையுமே காரணம் ஆகும்.

பெயரில் ஒன்றும் இல்லை என்றால்
இந்தியா–பாரதம்
மக்களவை–லோக்சபா
மாநிலங்களவை–ராஜ்ய சபா
காசி–வாரணாசி
லக்னோ–இலட்சுமணபுரி
பாட்னா–பாடலிபுத்திரம்
பரோடா–வடோடரா
பம்பாய்–மும்பை

என்று பெயர்களை மாற்றியது ஏன்? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

தனித் தமிழில் பெயர் சூட்டுவதால் என்ன நன்மை என்பதனை எண்ணிப் பார்ப்போம்.

1. சாதி, மதம் குறிப்பிடப்படுவதில்லை
2. சாதிமதத் தளைகளில் இருந்து விடுதலை கிட்டுகின்றது.
3. பிராமணனுக்கு மங்கலத்தையும், சத்திரியனுக்கு வலுவையும் வைசியனுக்கு பொருளையும், சூத்திரனுக்குத் தாழ்வையும் காட்டுகிற பெயரை இடவேண்டும் என்கிற மனுதர்ம வர்ணாச்சிரம முறை ஒழிக்கப்படுகிறது.
4. தமிழின் தனித்து இயங்கவல்ல தனிச்சிறப்பு நிலைநாட்டப்படுகின்றது.
5. தமிழர்களின் அறிவு, ஆற்றல், ஆராய்ச்சித் திறன், உழைப்பு, ஊக்கம் ஆகியனவற்றை உலகம் உணர்ந்து கொள்ள ஏதுவாகின்றது.
6. தமிழ் மொழி, தமிழ் மக்கள், தமிழ் நாடு, தமிழ்க் கலை, இலக்கியம், பண்பாடு, நாகரிகம்,சமயம், ஆன்மிகம், தெய்விகம், வரலாறு முதலியன வாழ்கின்றன, வாழவழி வகை வகுக்கப்படுகின்றன.
7. தமிழே உலக முதன்மொழி. தமிழரே உலக

**மோட்சம் அடைதற்குச் சாதனமாகச் சமய அநுட்டானத்தைப் படிப்படியாக நிரைப்படுத்தியுள்ளது சைவசமயம் மாத்திரமேயாம்**

முதல் மாந்தர், தமிழே திராவிடத்திற்குத் தாய். ஆரியத்துக்கு மூலம் என்கிற பண்டைப்பெருமையும் அருமையும் போற்றிப் பேணப்படுகின்றன.

8. படிப்பவர், கேட்பவர் மனத்தைப் பற்றும் சொற்களால் பெயர் அமைகின்றது.

இரட்டைக்குழந்தை ஆண் என்றால் செங்குட்டுவன் – இளங்கோ என்றும் பெண் என்றால் அங்கவை சங்கவை என்றும் பெயர் சூட்டலாம். மனம் இருந்தால் வழி உண்டு என்பது பழமொழி. ஆண் பெண் குழந்தையானால் தமிழ்வாணன், தமிழ் வாணி என்று பெயரிடலாம்.

எனவே, வீட்டில் தெருவில் நாட்டில் தமிழ்ப் பெயர்களே விளங்கச் செய்வது தமிழரின் தலையாய கடமையாகும்.

***தமிழரின் தமிழ்க் குழந்தை***
***தமிழ்ப் பெயர் பெறுதல் வேண்டும்*** **(புரட்சிக்கவிஞர்)**

***தாய்மொழியை வாய்மொழியால் அறியக்கூடும்***
***தமிழ்ப்பற்றை அவர் பெயரால் அறியக்கூடும்***
***(உவமைக்கவிஞர் சுரதா)***

***நல்ல தமிழ்ப் பெயரைப் பிள்ளைக்குச் சூட்டுங்கள்***
***நான் தமிழன் என்று அடையாளம் காட்டுங்கள்***
**(கலைமாமணி கவிஞர் ந. மா. முத்துக்கூத்தன்)**

***கணேஷ், மகேஷ், சுரேஷ் இனிக்குமா?***
***கபிலன், கரிகாலன், கலைவாணன் கசக்குமா?***
***(பாவலர் பல்லவன்)***

# தமிழ் ஆண்டு எது?

**குலத்தின் அருமை**

நம் வாழ்வில் திரும்பப்பெற முடியாதவை மூன்று. ஒன்று காலம், மற்றவை மானம், உயிர்.

குடும்பம், சமுதாயம், ஊர், நகர், நாடு உலகம், பற்றிய நிகழ்ச்சிகளைக் கணக்கிடுவதற்குக் கால அளவை இன்றியமையாத ஒன்றாகின்றது.

***நாளென ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும்***
***வாளது உணர்வார்ப் பெறின்***

என்ற குறள் மூலம் காலம் அறிதல் என்ற அதிகாரத்தின் வழியும் காலத்தின் அருமையைத் திருவள்ளுவர் உணர்த்துகிறார்.

நம் முன்னோர்கள் காலத்தை நொடி, நாழிகை, நாள், கிழமை, மாதம், ஆண்டு, ஊழி என்று வானிலைமுறைப்படி வரையறை செய்துள்ளனர். 60 நாழிகையை ஒரு நாளாகவும் ஒரு நாளை வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம், என்று ஆறு சிறு பொழுதுகளாகவும் ஓர் ஆண்டை இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்று ஆறு பெரும் பொழுதுகளாகவும் பிரித்துள்ளார்கள்.

காலத்தைக் கணக்கிடுவதில் இத்துணைக்கவனம் செலுத்திய தமிழர்கள் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளைத் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு ஆகியவற்றுக்குப் பொதுவான தொடர் ஆண்டுக்கணக்கால் குறிப்பிடும் வழக்கத்தைப் பின்பற்றவில்லை என்பது வியப்பாக இருக்கிறது, வருத்தம் தருகிறது.

**தொடர் ஆண்டு**

தலைநகரின் தோற்றம், பேரரசன் பிறப்பு, அரசர் முடி சூட்டிக்கொண்ட ஆட்சி தொடக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு அந்தந்த அரசர் பெயரோடு தொடர் ஆண்டு கடைப்பிடித்து வரப்பட்டது என்று சங்க இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள் மூலம் தெரிகின்றன. நாட்டுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் பொதுவான தொடர் ஆண்டால் காலத்தைக் கணக்கிடல் வேண்டும் என்ற கருத்து அரசர்களிடையும் இல்லை என்று தோன்றுகின்றது. தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் அதன் இன்றியமையாமையை அரசர்களுக்கும் பொது மக்களுக்கும் எடுத்துக் கூறியதாகவும் தெரியவில்லை.

***இந்தச்சூழ் நிலையையும் தமிழர்களிடம் மண்டிக் கிடந்த கடவுள், மதம், சாதி, மூடநம்பிக்கைச் செல்வாக்கையும் அரசர்களிடம் பெற்றுள்ள நெருக்கத்தையும் பயன் படுத்திப் பிரபவ முதல் அட்சய வரை உள்ள 60 ஆண்டு முறையைப்***

**யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி மாதொரு பாகனார் தாம் வருவர்**

***புகுத்தி விட்டது ஆரியம். அறுபது ஆண்டுகளின் பெயர்களில் ஒன்று கூடத் தமிழ் இல்லை. 60 ஆண்டுகள் பற்சக்கர முறையில் இருப்பதால் 60 ஆண்டுகளுக்கு மேல் உள்ள காலத்தைக் கணக்கிடுவதற்கு உதவியாகவும் இல்லை. அதற்கு வழங்கும் கதையோ ஆபாசமாக இருக்கின்றது.***

அக்கதை பின் வருமாறு அமைந்துள்ளது.

ஒரு முறை நாரத முனிவர் கிருஷ்ணமூர்த்தியை நீர் அறுபதினாயிரம் கோபிகைகளுடன் கூடி இருக்கிறீரே, எனக்கு ஒரு கன்னிகை தரலாகாதா? என்று கேட்க, அதற்குக் கண்ணன் நான் இல்லாப் பெண்ணை வரிக்க, என்றான். இதற்கு நாரதர் உடன்பட்டு அறுபதினாயிரம் வீடுகளிலும் பாத்தார். எங்கும் அவர் இல்லாத பெண்களைக் காணமுடியாததால் நாரதர் கண்ணனிடமே வந்து அவர் திருமேனியில் மையல் கொண்டு அவரை நோக்கி நான் தேவரீரிடம் பெண்ணாய் இருந்து ரமிக்க எண்ணம் கொண்டேன், என்றார். கண்ணன், நாரதரை யமுனையில் ஸ்நானம் செய்ய ஏவ, அவ்வாறே செய்து ஓர் அழகுள்ள பெண்ணாக மாறினார். இவருடன் கண்ணன் 60 வருடம் வாழ்ந்து அறுபது குமாரரைப் பெற்றார். அவர்கள் பிரபவ முதல் அட்சய இறுதியானவர்களாம். இவர்கள் வருஷமாம் பதம் பெற்றார்களாம்.

***–அபிதான சிந்தாமணி பக்கம் 1392–வெளியீடு1934***

இப்போது வழங்கும் 60 ஆண்டுப் பெயர்கள் சாலிவாகனன் என்பவனால் அல்லது கனிஷ்கனால் கி பி 78 இல் ஏற்பட்டவை. இவை வடநாட்டு அரசனால் ஏற்பட்டவையாதலால் வடமொழிப்பெயர்களாய் உள்ளன.

***த ஹிந்து பக்கம் 7 வெளியீடு 10 3 1940***

60 ஆண்டுச் சக்ரம் சுற்றிச் சுற்றி வருவதனாலும் மிகக் குறுகியதினாலும் சரித்திர நூற்குப் பயன் படாது. ருதோற்காரி என்று கூறினால் எந்த ருதோற்காரி என்று அறியப்படாமையால் இந்த அளவு இன்மை பற்றித் தமிழுக்கு ஒரு குறையும் இல்லை.

***பாவாணரின் ஒப்பியன் மொழிநூல் பக்கம்163 ஆண்டு1940***

மேற்குறிப்பிட்டவை மூலமாக 60 ஆண்டு வந்த வழி அது நடைமுறைக்கு நாட்டில் வந்த ஆண்டு, சரித்திர நூலுக்குப் பயன்படாமை ஆகியன பற்றிய செய்திகளை நாம் அறிய முடிகிறது. கண்ணனும் நாரதரும் கலவி செய்து பெற்றெடுத்த குமாரர்கள்தாம் 60 தமிழ் வருடங்கள் என்பது கதை. எல்லாரும் குமாரர்கள், குமாரியே இல்லை. ஆண்டுக் கதையிலும் ஆண் ஆதிக்கமே!

இந்தக்கதையே அருவருக்கத்தக்கது, ஆபாசமானது, அறிவுக்கும் அறிவியலுக்கும், ஆராய்ச்சிக்கும் பொருத்தம் இல்லாதது. கருத்துக்கும் காலத்துக்கும் ஒத்துவராதது. மானமும் அறிவும் உள்ள மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதது.

எந்தச் சொல்லும் தமிழ் இல்லை, தமிழில் மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள் பல: அனைத்துச் சொற்களும் வடமொழி வடிவங்களே. தமிழ் மொழிக்கும் மரபுக்கும் பண்புக்கும் மாறானாவையே. இந்தக் குழப்ப ஆண்டு முறையால் குடும்பம், சமுதாயம்( சமுதாயம்) நாடு, உலகம் ஆகியவற்றின் வாழ்க்கை, வரலாற்று நிகழ்ச்சிகளை 60 ஆண்டுகளுக்கு மேல் கணக்கிடுவதற்கு முடியவில்லை. இந்த 60 ஆண்டு முறையும் பிறவும் தமிழ் காட்டுமிராண்டி மொழி, தமிழர்கள் காட்டு மிராண்டிகள் என்பதற்குச் சான்றாக விளங்குவதால்தான் அறிவு ஆசான் தந்தை பெரியாரும் அரசியல் ஆசான் பேரறிஞர் அண்ணாவும், தமிழ் அறிவு மொழி என்றும் தமிழர்கள் மானமும் அறிவும் உள்ள மக்கள் என்றும் விளங்கச் செய்வதற்குத் தங்கள் இறுதி மூச்சுவரை எழுத்து, பேச்சு, பரப்புரை(பிரச்சாரம்), போராட்டம் முதலியவை மூலம் பாடுபட்டார்கள்.

## திருவள்ளுவர் ஆண்டு

இந்த ஆண்டு முறையால் தமிழர் மொழி, மரபு, மானம், பண்பு, வாழ்வு முதலியவற்றிற்கு ஏற்பட்டுள்ள அழிவும் இழிவும் எண்ணிப்பார்த்து, உணர்ந்து தெளிந்த தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் 1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகள் தலைமையில் கூடி ஆராய்ந்தார்கள்.

திருவள்ளுவர் இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் என்றும் அவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டு எனக்கொள்வது என்றும் முடிவு செய்தார்கள். இந்த முடிவு செய்தவர்களில் தலையான தமிழ் அறிஞர்கள் தமிழ்க் கடல் மறைமலை அடிகள், தமிழ்த் தென்றல் திரு வி. க, தமிழ்க்காவலர் சுப்பிரமணிய பிள்ளை, சைவப்பெரியார் சச்சிதானந்தம் பிள்ளை, நாவலர் ந. மு வேங்கட சாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ.பெ விசுவநாதம்

**நாதத்தின் வல்லமையை உள்ளபடியே உணர்ந்து சொல்வது முறை. நாத வடிவாக விளங்குபவன் சிவன் என்பது பற்றியே நாதன் என்கின்றனர்.**

ஆகியோர் ஆவார்கள்.

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை, இறுதி மாதம் மார்கழி, புத்தாண்டு தொடக்கம் தை மாதம் முதல்நாள். கிழமைகள் வழக்கில் உள்ளவை. திருவள்ளுவர் காலம் கி.மு 31 எனவே, ஆங்கில ஆண்டுடன் 31ஐக் கூட்டினால் வருவது திருவள்ளுவர் ஆண்டு. உதாரணம் 2000 த்துடன் 31ஐக் கூட்டினால் வருவது திருவள்ளுவர் ஆண்டான 2031. தமிழ் நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971 முதல் தமிழ் நாடு அரசு நாட்குறிப்பிலும் 1972 முதல் தமிழ் நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ் நாடு அரசின் அனைத்து அலுவல்களிலும் நடைமுறைப்படுத்தி வருகிறது.


## வேண்டுகோள்

தமிழ்மொழி, தமிழ்இனம், தமிழ்நாடு ஆகியவற்றின் நலமும் வளமும் நாடும் அனைவரும் சாதி, மதம்,கட்சி,அரசியல் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு நின்று, 60 ஆண்டு ஆபாச முறையை அகற்றவும், தமிழ் ஆண்டாகிய திருவள்ளுவர் ஆண்டு முறையைத் தம் வாழ்வில், வழக்கில், வரலாற்றில் பின்பற்றவும் பரப்பவும் வேண்டுகிறேன்.

***தமிழ் ஆண்டு முறையைப்பின் பற்றுவோம்—நாம்***



## தொலைந்து போன மானிடம்!



**திரு க. குணரத்தினம்**

பிறந்தார் இறந்தார் என்றில்லாமல்
பிறப்புக்கு அர்த்தம்சொன்ன பெருமகனாய்
அறத்தால் உயர்ந்து
அறிவால் உயர்ந்து
மறத்தமிழனாய் இவர் சென்றார்.
கலசம் இவரை இழந்து
கண்ணீர் வடிக்கின்றது.
காலம் இவரைப்பற்றிக்
கட்டுரை எழுதப் பேனாவைத்
தேடுகின்றது.
தொலைதூரம் தேடினும்
கிடைக்காத மானிடம்
தொலைந்து போனது
இவரின் இறப்பினால் தான்!

**மு. நற்குணதயாளன்**

**உடமைவேண்டேன் உன் துணை வேண்டினேன். வேண்டாதனைத்தையும் நீக்கி வேண டியதனைத்தையும் அருள்வதுன் கடனே!**

# GNANAM
T E L E C O M




தொலைபேசி இணைப்புக்கள் மலிவு விலையில் வேண்டுமா?

## நிறைவான சேவை!
## விரைவான சேவை!
## தெளிவான சேவை!

| | |
|---|---|
| Australia | 5p |
| Canada | 5p |
| France | 5p |
| Germany | 5p |
| India | 25p |
| Italy | 7p |
| Malaysia | 14p |
| Pakistan | 29p |
| Singapore | 15p |
| Sri lanka | 27p |
| U.K | 3p |
| U.K mobile | 11p |

இவற்றுக்காக எங்கும் நீங்கள் போகவேண்டாம்.
உடனே அணுகுங்கள் ஞானம் தொலைபேசி நிறுவனத்தை.

**இத்தனைக்கும் நீங்கள் அணுகவேண்டிய முகவரி**

*Gnanam*
**telecom centers**

180 High Street North
East ham London
Tel: (+0044) 0208 47 08 84 4
Fax: (+0044) 0208 47 08 77 7

# அறப்பணியில் ஆலயங்கள்

இந்தப் பகுதியில் அறப்பணியில் ஈடுபடும் ஆலயங்களின் செய்திகளை வெளியிடவுள்ளோம். ஆலயங்கள் அறப்பணி செய்தேயாகவேண்டும் என்பதை நாம் வலிமையாக வலியுறுத்துகின்றோம். ஆலய தர்மகர்த்தாக்கள் இது சம்பந்தமான விடயங்களை எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம். இம்முறை அறப்பணியில் ஈடுபட்டதாக ஆதாரபூர்வமாக நாம் அறிந்துகொண்ட மூன்று ஆலயங்களின் செய்திகளை உங்களுக்குத் தருவதில் நாம் பெருமைப்படுகின்றோம்.

## இலண்டன் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்

இவ் ஆலயத்தின் அறங்காவலர் திரு கா. சீவரத்தினம் அவர்கள் பின்வருமாறு எங்களுக்கு எழுதியுள்ளார்.

**...... வணக்கம் செய்தவற்றைச் சொல்லக் கூடாது. கொடுத்தவற்றைக் கூறினால் கொடுத்த பலன் இல்லாமல் போய்விடும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். ஒரு சில காரணங்களுக்காக நாங்கள் இதுவரை செய்தவற்றை உங்களுக்குக் கூறவேண்டிய கட்டாயத்திற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். சமுதாயத்திற்குச் சேவை செய்வது சிவயோகத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அதற்கமைய எங்களுக்கு தற்போது 60 ஆயிரம் பவுண்கள் கடன் இருந்தும் எங்களால் முடிந்தவற்றை காலத்தின் தேவை கருதி செய்து வருகின்றோம். கோயிலின் வருமானத்தில் மட்டுமல்லாது கடன் பட்டும் ஊருக்கு பணம் அனுப்பியுள்ளோம். நாங்கள் செய்த பணிகளில் சிலவற்றை இத்துடன் இணைத்துள்ளோம்.....** இவ்வாறு பணம் அனுப்பிய விபரங்களுடன் மேற்படி கடிதம் எங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் **தமிழர் புனர்வாழ்வுக்கழகம், கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடி நிலயம் , முல்லைத்தீவு செஞ்சோலை, திருகோணமலை இந்து இளைஞர் பேரவை, தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, .........** ஆகிய பல ஸ.தாபனங்களுக்கூடாக தன் பணியைச் செவ்வனே செய்த விபரங்களை எமது பார்வைக்கு அனுப்பியுள்ளனர். மொத்தமாக ஒருவருடகாலத்தில் நலிந்தோரின் துன்பம் தீர்க்க 28,000 ஆயிரம் பவுண்களை அனுப்பியுள்ளார்கள். இது எம்மையும் எமது சமூகத்தையும் பெருமைப்பட வைத்துள்ளது. இவர்கள் பணி தொடர்ந்து நடைபெற எம்பெருமான் நெஞ்சுரத்தையும் பணவளத்தையும் இவர்களுக்கு வழங்கட்டும்.

## ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

சமீபத்தில் இவ் ஆலயத்தில் நடைபெற்ற பிரத்தியேக வருடாந்தக் கூட்டத்தில் கோயில் வருமானத்தின் வருமானத்தில் 10சத வீதமான பணத்தை(10 ஆயிரம் பவுண்களுக்கு மேற்படாத தொகையினை) நலிவுறும் மக்களுக்கு அனுப்புவதாக சட்டரீதியாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. முக்கியமான இந்தத் தீர்மானத்தையிட்டு கலசமும் தமிழ்மக்களும் பெருமை கொள்கின்றோம்.

## உயர்வாசற் குன்று முருகன் ஆலயம்

இவ்வாலயம் சமீபத்தில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் விழாவின்போது 2000 ஆயிரம் பவுண்களை நலிந்தவர்களுக்கு உதவுவதற்காக வழங்கியது. இப்படி பலபல உதவிகளை இவ் ஆலயமும் செய்து வருகின்றது. இது! தமிழ்மக்களையும் கலசத்தின ரையும் பெருமைப்படவைத்துள்ளது.

# இலண்டன் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் சிவயோகம் திருமணமண்டபம்

**இரு வருடங்களில் 200 திருமணங்களைக் கண்ட ராசியான திருமண மண்டபம்.**

**500 இருக்கைகள்**
**அழகிய மணவறைகள்**
**அலங்கார ஜோடனைகள்**
**இசைக் கருவிகள்**
**உணவு வசதிகள்**

சகலதும் சிறந்த முறையில் அமைந்துள்ள இலண்டனில் உள்ள ஒரே ஒரு திருமண மண்டபம்

தொடர்புகட்கு:

நிர்வாகி

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

சிவயோகம்

**தொலைபேசி: 0208 767 9881**

**தொலைநகல்: 0208 767 9881**

# நர்த்தன விநாயகா

கந்தையா சிவகுமார்

## ஔவை கண்ட பாதச்சிலம்பு

ஔவையார் தியானத்தில் இருந்தார். கைலாசம் சென்று சிவபெருமானின் பாதக் கமலங்களைத் தரிசிக்க வேண்டும் என்ற நெடு நாளைய விருப்பம் எப்பொழுது நிறைவேறுமோ? ஓர் ஏக்கம்.

கரிமுக வாரணக் கணபதி மீது அவர் வைத்திருக்கும் அன்பு அளப்பரியது. எக்காரியமும் வெற்றி பெற எப்போதும் அவரைத் தான் முதலில் வேண்டுவார். துங்கக்கரிமுகத்தானிடம் சங்கத்தமிழ் மூன்றையும் கேட்டுப்பெற்றவர் அல்லவா. அன்று தமிழ்க்கிழவியின் மனத்தில் ஒரு புதிய உற்சாகம். ஏனோ தெரியவில்லை.

தன் மீது அளவில்லாப் பற்றுக்கொண்ட சுந்தரமூர்த்தி நாயனாரை அழைத்து வரும்படி, கைலை நாதன் ஒருவெள்ளை யானையை அனுப்பியிருந்தான். அதைப் பார்த்த சுந்தரரின் ஆத்ம நண்பன் சேரமான் தானும் வருகின்றேன் என்று தன் வெண்பரிதியில் புறப்பட்டான். அரசனாயிற்றே. இதைப்பார்த்த ஔவையின் மனம் சற்றுப் பேதலித்தது, சுபாவம்தானே. அத்திமுகத்தானை இன்னும் ஆழமாகத் தியானித்தாள்.

இறைக்கப் பெருகும் ஊற்றுப் போல அவள் இதயத்தின் அடியிலிருந்து மெய்ஞ்ஞானம் பெருக்கெடுத்தது. வித்தக விநாயகனின் நர்த்தன ரூபமே அவள் கண்ணுக்குத் தெரிந்தது. ஆடும் அவன் பாதச்சிலம்பின் நாதமின்றி வேறொன்றும் கேட்கவில்லை. பரவசப்பட்டுப் பாடினாள்.

சீதக்களபச் செந்தாமரைப்பூம் பாதச்சிலம்பும் பலஇசை பாட என்று ஆரம்பித்து, அகவல் தொடுத்தாள். நர்த்தன கணபதியின் அழகுத் தோற்றத்தை முதல் ஈரேழு வரிகளில் நயம்படச் சொன்னாள். அற்புதம் நின்ற கற்பகக்களிறை அகம் உருகப் பாடினாள். தாயாய் என்க்குத்தானெழுந்தருளி மாயாப் பிறவி மயக்கம் அறுத்தாய் என்றாள். குருவடிவாகிக் குவலயம் தன்னில், திருவடிவைத்து, திறம் இதுபொருள் எனக் காட்டிய கருணையைச் சொன்னாள். அரவ வடிவத்துடன் மூலாதாரத்தில் உறங்கிக்கிடக்கும் குண்டலினி சக்தியை எழுப்பும் கருத்தை அறி வித்துக் காட்சிகொடுத்த கருணையைச் சொன்னாள். அகவலின் அந்தத்திலும் வித்தக விநாயகனின், விரைகழலே சரணம் என்றாள். அத்திமுகத்தான் மனம் கவர வேறென்ன வேண்டும். துதிக்கையால் ஔவையைத் தூக்கித் தன் தந்தை இருக்கும் கைலைமலை நாதனிடம் உடனே சேர்ப்பித்தான்.

## நக்கீரர் கண்ட நர்த்தன கணபதி

நக்கீரதேவர் அருளியதாக வழங்கப்படும் விநாயகர் திருவகவலில் ஓர் அழகிய பகுதி வருகின்றது. அவர் சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கை, கார் நிறமேனிக் கற்பகக் களிறை, ஏழைஅடியேன் இரு விழி காண வரவேண்டுமென்று வழுத்துகின்றார். திங்கள் முடியான் திருவுளம் மகிழ, வந்த வாரண வடிவை விநாயகர் திருவகவல் புனைந்து துதிக்கும் போது, பாதச்சிலம்பு பல தொனி ஆர்ப்ப, தண்டைச்சிலம்பும் தங்கக் கொலுசும், எண்திசை மண்டலம் எங்கும் முழங்க,தொகுது, துந்திமி, தொந்தோமெனவே,தகுதகு திந்திமி தாழம் முழங்க ஆடிய பாதத்தை வெகு அழகாக வர்ணிக்கின்றார். பேரிகை என்னும் பேரொலி பெருக்கும் தாள வாத்தியத்திற்கு துந்துமி என்றும் ஓர் பெயர் உண்டு.

## புராதன நர்த்தனகணபதிச் சிற்பங்கள்

நர்த்தன கணபதிச் சிற்பங்கள் முதன் முதலாகத் தென்னிந்தியாவின் மேல்மத்திய பகுதிகளில் கி.பி 6 ஆம் நூற்றாண்டளவில் தோன்றின என்பது சிற்ப வரலாற்றாசிரியர்கள் கூற்று. இது அப்பகுதிகளைச் சாளுக்கியர் ஆண்ட காலம். முதலாம் புலிகேசி வாதா பியைத் தலைநகராகக் கொண்டு சாளுக்கிய சாம்ராஜ்யத்தை ஆரம்பித்த காலம். இன்று கர்னாடகா என்று இப்பிரதேசம் அழைக்கப்படுகின்றது.

நடன உருவில் அமைந்துள்ள விநாயகர் சிலைகளுள்

**போற்றி! போற்றி! போற்றி! போற்றி! கண்ணபெருமானே நின்**
**பொன்னடி போற்றி நின்றேன்!**

அதி தொன்மை வாய்ந்தது பாதாமிக்(வாதாபி) குகைகளுள் தாண்டவமாடும் சிவன் உருவத்தின் அருகே காணப்படும் நிருத்திய கணபதி வடிவமாகும். இதே போன்று சிவனுடன் நடனமாடும் விநாயகர் உருவத்தைப் பாதாமிக் அருகிலுள்ள ஐகோலேயில் சாளுக்கியர் காலத்து கற்பாறைக் கோயில்களிலும் காணலாம். சோழ நாட்டு நர்த்தன கணபதிச் சிலைகள், உதாரணமாக கங்கை கொண்ட சோழபுரத்தைச் சேர்ந்தவை, சாளுக்கியர் காலத்தவையைப் போன்றல்லாது, பொலிந்து நிதானம் கூடியவையாக இருக்கின்றன. (ஆதாரம் **Ganaesha-the auspicious,the beginning by shakunthala jagannathan and nanditha kirshna)**

## இமயத்துக்கு அப்பால்

மொங்கோலிய நாடு, இமயமலைத்தொடருக்கு வடக்கே, ஆசியாக்கண்டத்தின் மத்திய கிழக்குப் பகுதியில் இருக்கின்றது. அந் நாட்டில் அழகான நர்த்தன விநாயக வடிவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பாரத நாட்டில் இருந்து திபெத் நாடு ஊடாக கணபதி வழிபாடு மொங்கோலியாவிற்குப் பரவியிருக்கிறது. 13 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் மொங்கோ லியாவ-ிற்குப் பரவிய போது விநாயகர் வழிபாடும் பரவியதாக அந்நாட்டு புராதனக்கதைகள் கூறுகின்றன. கஸ்ப என்ற மதகுரு பௌத்த மதத்தை அந்நாட்டிற்குக் கொண்டு சென்று மாமன்னன், குப்ளாய் காணின் மனதை மாற்றினான் என்பது வரலாற்றுக் கதை. கஸ்பரின் தந்தை விநாயக பக்தன். அவன் வேண்டுதலுக்கு இசைந்து ஆனைமுகத்தான் தன் துதிக்கையால் அவனை மேரு மலை உச்சிக்குத் தூக்கிச் சென்று உன் மகன் அங்கு தெரியும் நிலப்பரப்பை ஓர் நாள் தன் வசப்படுத்துவான் என்று கூறியதாக பூர்வீகக் கதைகள் பகர்கின்றன. மொங்கோலிய நட்டில் கண்டெடுக்கப்பட்ட நர்த்தன விநாயக வடிவங்கள் திரிசூலம் போன்ற சிவ அம்சங்களைக் கொண்டவைகளாக இருக்கின்றன. **(Imprint of india thought and culture abroad-Ganesha beyond the indian frontierrs-M.K Dhavalikar)** அருந்தமிழ் மூதாட்டி அவ்வையைத் தன் துதிக்கையால் ஆனைமுகன் தூக்கிச்சென்ற கதை ஞாபகம் வருகின்றது.

## உம்பர் தருவும் உமையாள் மைந்தனும்

நிருத்திய கணபதி வடிவங்கள் அதிகமாக கற்பக விருட்ச மரங்களுக்குக் கீழேயே சித்தரிக்கப்படுகின்றன. (ஆதாரம்-**loving ganesa-by satguru sivaya Subramaniyaswami)** அடியார்களுக்கு அருள் பாலிக்கும் சற்றுக் குதூகலமான தோற்றம் இது.

திருப்புகழ் தந்த அருணகிரிநாதர், எந்தன் உயிர்க்கு அதரவு தருவாயே என்று ஐந்து கரத்து ஆனைமுகப் பெருமானை வேண்டும் போது, உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி... என்று ஆரம்பித்து ஒண்கடலில் அமுதம் போன்ற மெய்ஞ்ஞான உணர்வு தன் மனத்தில் ஊறி, அந்த உணர்வு இன்பரசமாகப் பலகாலும் பெருக வேண்டுமென்று கேட்கின்றார். உம்பர் தரு-தேவுக்களுடைய காலகாலத்திற்கு பயன் தரும், நினைத்ததைக் கொடுக்கும் கற்பக மரம்,தேனு-கேட்டதைத் தரும் காமதேனு என்ற தெய்வீகப்பசு, மணி-சிந்தித்ததைத் தரும் சிந்தாமணி என்ற தெய்வீக மணி, இவற்றினுடைய வள்ளல் தன்மையை விட மனம் இரங்கி எனக்கு நீர் அருள் புரிய வேண்டும் என்று விநாயகரை அருணகிரியார் வேண்டும் அற்புதமான பாடல் இது.

திருவிரட்டை மணிமாலையில் கபிலதேவர் கூறியது போல, காலத்தால் ஆனைமுகத்தானைத் தொழுது கைகூப்பினால் திருவாக்கும், செய்கருமம் கைகூடும், செஞ்சொற் பெருவாக்கும், பீடும் பெருக்கும், ஆகையால் அன்பருக்கு அருள் கூட்ட ஆடும் விநாயகன், கற்பக விருட்சத்தின் கீழ் காட்சி கொடுப்பது சாலப் பொருத்தமல்லவா.


## ஈழத்துத் தமிழ் நூற் கண்காட்சி

புராணம், இதிகாசம், வரலாறு, நாவல், ஆன்மீகம், கவிதை, சிறுகதை, சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு என விரியும் ஈழத்து நூல்களின் கண்காட்சி லண்டனில் நடைபெறவுள்ளது.

நூல்களை அனுப்பவேண்டிய முகவரி

**MULLAI AMUTHAN (EALAM)**
**34 RED RYFE ROAD**
**PLAISTOW**
**LONDON**
**E13 0JX**
**TEL: 0208 586 7783**


**புலாலுண்ணலை புத்த சமயம் விலக்கவில்லை. இஸ்லாம் சமயமும் விலக்கவில்லை.**
**கிறிஸ்து சமயமும் விலக்கவில்லை**

# கனடாவில் அருள்மிகு ஐயப்பன் இந்து ஆலயம்

**-ஆ க மாணிக்கம்-**

*அறங்காவலர் சபை உறுப்பினர்*

*கனடா அருள்மிகு ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயம்*

பந்தளத்தில் அரசிளம் கன்றாய் நின்றாய்
பம்பையிலே உதித்திட்ட பாலன் ஆனாய்
சுந்தரனே அரசனாய் அச்சன் கோயில்
துய்யனே குளத்துப் புழைபாலன்ஆனாய்
அந்தரமாய் காந்தமலை ஜோதி ஆனாய்
ஆரியங்காவிலே அய்யன் ஆனாய்
சிந்தைமிகு எரிமேலி வேடன் ஆனாய்
திருவடியைத் தொழுவோர்க்குத் தெய்வம் நீயே

சைவமக்கள் எங்கு சென்று வாழுகின்றார்களோ அங்கெல்லாம் ஆலயம் அமைத்து இறைவனை வழிபாடு செய்வதோடு தங்கள் கலாச்சாரம் பண்பாடு அழியாமல் பாதுகாத்து வருகிறார்கள் என்பதை இன்று உலகநாடுகளில் வாழும் தமிழர்கள் சமுதாயத்தை உற்று நோக்கும்போது உணர முடிகின்றது. இவ்வகையில் கனடாவில் வாழும் சைவமக்கள் பல ஆலயங்கள் அமைத்துத் தங்கள் கலாச்சார வழியில் வாழுகின்றார்கள். இறைவன் காலத்துக்குக் காலம் பல வடிவங்களில் அவதார புருஷராகத் தோன்றி அருள் பாலித்து வருகின்றார் என்பதைச் சமய வரலாறுகள் மூலம் நாம் அறியமுடியும். இன்று சபரி மலையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் கலியுகக் காவலன் ஸ்ரீஐயப்பனின் திருவருள் உலகமெல்லாம் வியாபித்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. ஆண்டு தோறும் கார்த்திகை மாதம் பிறந்ததும் ஓம்சுவாமியே சரணம் ஐயப்பா என்ற ஒலியைக் கேட்க முடிகின்றது. கனடாவிலும் சரணகோஷத்தில் ஈர்க்கப்பட்ட சில அடியார்கள் 1991ம் ஆண்டு ஒரு வீட்டின் கீழ்த்தளத்தில் ஸ்ரீஐயப்பனின் உருவ விக்கிரகத்தை வைத்து ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரார்த்தனை செய்து வந்தார்கள் காலகெதியில் அடியார்கள் கூட்டம் பெருகி பெருகி வந்தமையால் ஒரு பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபாடு செய்து வந்தார்கள்.

ஐயப்பனின் திருவருளினால் பல நன்மைகளையும் பெற்று வந்த மக்கள் தினமும் ஐயப்ப வழிபாட்டை மேற்கொள்ளவிரும்பி மார்க்கம் வீதியில் இருந்த தொடர்க்கட்டிடத்தின் ஒரு பகுதியை வாடகைக்கு எடுத்து அங்கே ஸ்ரீஐயப்பனை மூல மூர்த்தியாகவும் விநாயகர் சிவன் அம்மன் நாராயணன் துர்க்கை முருகன் ஆகியோர்களைப் பரிவார மூர்த்தியாகவும் பிரதிட்டை செய்து வணங்கி வந்தார்கள் ஒவ்வொரு ஞாயிறும் பகல் விசேட பூசைகள் நடைபெற்று ஐயப்பன் உள்வீதி உலாவருங் காட்சியும் நடைபெற்றது. தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

அடியார்களின் வருகை படிப்படியாக பெருகி வருவதை உணர்ந்த அறங்காவலர் சபையார் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளிலும் விசேட அபிஷேக பூசைகள் அன்னதானம் நிகழ ஒழுங்கு செய்துவந்தார்கள்.

**ஒன்றேரியோ ஸ்ரீ ஐயப்பசமாஜம்** என்பதை ஏற்படுத்தி அதில் பல அடியார்கள் அங்கத்த வர்களாகச் சேர்ந்து தொண்டாற்ற வழி வகுக்கப்பட்டது. ஆரம்பத்திலே ஆரம்பிக்கப்பட்ட இச் சமாஜத்தில் கேரளத்திலிருந்து வந்து இங்கே வாழுகின்ற வர்களும் தமிழீழத்திலிருந்து வந்தவர்களும் உறுப்பினர்களாக இருந்ததோடு தொண்டாற்றியும் வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மக்கள் ஆலயமாக விளங்கும் இந்த ஐயப்பன் இந்து ஆலயம் விரைவாக வளர்ச்சியடைவதற்கு மூலகாரணம் பாகுபாடில்லாமல் கனடாவில் வாழும் சைவமக்களின் முயற்சியேயாகும்

ஐயப்பன் திருவருளினால் ஈர்க்கப்பட்ட அடியார்க ளின் வருகை தீவிரமாக கூடிக்கொண்டமையால் வாடகைக்கு ஒழுங்கு செய்த தற்காலிக கட்டிடம் போதாமையை உணர்ந்து நிரந்தர காணி வாங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்கள் நிலமையை உணர்ந்து பேருதவி செய்ய

**கிரியையாவது சிவலிங்க பூசை செய்தல்.**

வந்தமையைப் பயன்படுத்தி 1997ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்து ஏக்கர்காணி பன்னிரண்டு இலட்சத்துக்குக்கடன் அடிப்படையில் வாங்கப்பட்டது இப்போது அக்காணியிலுள்ள கட்டிடத்தில் ஆலயம் அமைக்கப்பட்டு பூஜைகள் விழாக்கள் நடைபெறுகின்றன.

கனடாவில் சைவ ஆகம முறைப்படி ஒரு இந்துஆலயம் அமைக்க வேண்டு மென்பது மக்களில் பலரின் விருப்பமாகும். அதனால் அதைக் கருத்தில் கொண்டு ஐயப்பன் மூல மூர்த்தியாக வீற்றிருக்க சிவன் அம்மன் விநாயகர் பெருமாள் துர்க்காதேவி முருகன் நாகபூஷணி தெட்ஷணாமூர்த்தி பூரணை பஷ்பகலா சமேதஐயனார் வைரவர் நவக்கிரகங்கள் பரிவார மூர்த்திகளாக அமைய அவற்றிற்குரிய மூலவிக் கிரகங்களும் எழுந்தருளும் விக்கிரகங்களும் வருவிக்கப்பட்டு ஆத்யபாலாலய பிரதிஷ்டா அபிஷேகம் செய்யப்பட்டது கூடிய விரைவில் சைவ ஆகம முறைப்படி எல்லா மூர்த்தங்களுக்கும் ஆலயம் அமைக்க வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றின் வளர்ச்சிக்கு பொதுமக்கள் தொண்டர்கள் அறங்காவலர் சபையார் முதலியோர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் தீவிரமுயற்சியுமே காரணமாகும்.

எங்கள் தாய்நாட்டில் வழிபாடு செய்ய சமய அறிவைப்பெற கலாச்சாரத்தை பின்பற்ற வெவ்வேறு வகையில் பலவசதிகள் இருக்கின்றன. பல கலாச்சாரங்களையும் பலமொழி களையும் பின்பற்றி வாழுகின்ற பலசமுதாய மக்கள் வாழும் இந்நாட்டில் எங்கள் சமுதாயமக்கள் தங்கள் கலாச்சாரத்தைப் பின்பற்றி வாழவழி வகுக்க வேண்டியது அத்தியாவசியமாகும். அவ்வகையில் பழையகாலத்தில் ஆட்சி புரிந்து வந்த தமிழ் மன்னர்கள் ஆலயங்களை கட்டுவித்ததோடு அவற்றோடு இணைந்து செயற்படக்கூடியதாக கலைக் கூடங்களையும் பாடசாலைகளையும் அமைத்தனர். இங்கேயும் ஆலயங்கள் தனிய வழிபாட்டு நிலையங்களாக இராமல் தமிழர்களின் கலாச்சாரம் பண்பாடு மொழி வளரவசதி செய்யவேண்டும். அவற்றைக் கருத்தில் கொண்டு ஐயப்ப சமாயத்தார் தமிழ்ச் சிறுவர்களுக்காக தமிழ் சமயம் வாரந்தோறும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடாத்திவருகின்றார்கள். அத்தோடு பாரம்பரிய கலைகள் வளர நடனம் இசை மிருதங்கம் கீபோடிங் வகுப்புக்களும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. சிறுவர் தொடக்கம் முதியோர் வரை அறிவை வளர்க்கக் கூடிய தமிழ் சமய நூல்களைக்கொண்ட சரஸ்வதி நூலகம் ஒன்றையும் அமைத்துள்ளார்கள். கூடிய விரைவில் முதியோர் இல்லமும் தியான மண்டபமும் அமைக்கத் தீர்மானித்துள்ளார்கள்.

இன்று ஆலய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் தொண்டர்கள் இளைஞர்கள் வழிதடுமாறி இன்னற்படும் இக்காலத்தில் பல இளைஞர்கள் ஐயப்பனின் திருவருளால் தாமே விரும்பி வந்து ஆலய வணக்கத்தில் ஈடுபடுவதோடு பல தொண்டுகளையும் செய்து வருகின்றார்கள் வருங்காலத்தில் ஸ்ரீஐயப்பன் ஆலயம் பல வகையிலும் எங்கள் சமுதாயத்திற்கும் ஏன் மற்றைய சமுதாயத்தவர்களுக்கும் நல்வழிகாட்டும் சிறந்த நிலையமாக அமையும் என்ற நம்பிக்கையோடு ஸ்ரீஐயப்பசுவாமியை வழிபாடு செய்து திருவருள் கைகூட வேண்டிக் கொள்ளுகின்றேன்.

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

**ஹரிகரபுத்திரனை ஆனந்தரூபனை**
**இருமூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை**
**சபரிகிரீசனை சாந்த சொரூபனை**
**தினம்தினம் போற்றிப்பணிந்திடுவோம்**

**சரியையாவது சிவாலயத் தொண்டு செய்தலும் விநாயகர் முதலிய உருவத் திருமேனிகளுள் ஒன்றுக்குப் பூசை செய்தலுமாகும்**

# சங்கத்தின் செய்திகள்

## 23 ஆவது ஆண்டு விழா

சைவ முன்னேற்றச் சங்கத்தின் 23 ஆவது ஆண்டு விழா மிகச் சிறப்பாக கேற ˚றம் பாடசாலை மண்டபத்தில் நடந்தது. இவ் விழாவிற்கு மகுடம் வைத்தாற்போல் ஈழத்துக் கலைஞன் பொன் சுந்தரலிங்கத்துக்குப் பாராட் டு விழா நடைபெற்றது. இவ் விழாவின்போது திரு பொன் சுந்தரலிங்கம் அவர்களால் பாடப்பட்டு இசை அடைத்தட்டு வடிவத்தில் வெளியிடப்பெற்ற பக்திப் பாடல்கள் அடங்கிய தொகுதி வெளியிட்டு வைக்கப்பட்டது.

## தமிழ்ப் பாடப் புத்தகங்கள்

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பிள்ளைகளின் நன்மை கருதி சங்கம் நான்கு தமிழ்ப் பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. இப் புத்தகங்களைப் பெற விரும்புவோர் நால்வர் தமிழ்க் கல்வி நிலைய அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

**தொலைபேசி இலக்கம்: 0208 924 8492**

With best compliments from

RATNA & CO

SOLICITORS

169A High street North, East Ham, London E6

Tel: 0208 470 8818, 0208 554 6701

# லக்சுமிஸ் ஜுவலர்ஸ் & சில்க் ஹவுஸ்



East Ham மஹாலக்ஷ்மி ஆலயமருகே
பிரமிக்கத்தக்க அழகுக்காட்சியறையுடன்
வைரத்தாலிக்கொடி, சங்கிலிகள், காப்புகள்,
அட்டியல்கள்,படையப்பா நெக்கிலஸ்கள்
என சகல தங்க நகைகளும்
22 கரட்டில் உறுதியானவை.

திருமணத்திற்கான சிறந்த ரககூறைச் சேலைகள்
காஞ்சிபுரம் ரங்கோலி,
கோலம், பட்டுப்புடைவைகள்

இன்னும் புதிய மிலேனியத்தில்
உங்கள் புதிய வாழ்வோடு இணைகிறது
DAKSHINOTRI
(டக்ஷிநோற்றி)

தரம்! தெரிவு!! மலிவு!!!
இவையனைத்தையும் மிக மலிவு விலையில் பெற்றிட

வாரத்தில் ஏழு நாட்கள் திறந்திருக்கும்

## LAKSHMIS JEWELLERS & SILK HOUSE

**276 High Street North,**
**East Ham E12 6SA**
**Tel: 020 8470 5600**
**Fax: 020 8470 3448**

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை

# Western Jewellers

**Specialist in 22 ct. Gold Jewellery**



*Creates the New Woman*

230 UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW

**Tel : 020 8767 3445**

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

---

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைக்கப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 020 8646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 28.10. 2000 அன்று வெளியிடப்பட்டது.